ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்று — ஆண்டாள்

தொகுதி ௩௧	கர ஹூ கார்த்திகை மீ	பகுதி ௧௧

பிரார்த்தனை

ஸ்ரீராமகிருஷ்ண நாமாமிருதம்

நூற்றெட்டுத் திருநாமம்

(253-ம் பக்கத் தொடர்ச்சி)

64. நிசதயையின் ஸாகரப் பேர் நிகழ்த்தினர்வித் யாஸாகர்.

65. சசதரபண் டிதர்தரும்பேர் சாதகர் சூடாமணியே.

66. அங்கந்தொறும் மஹாபாவ அடையாளந் தனைக்கண்டு, பங்கமறும் பகவான் தாஸ் பிரியராதை இவரென்றார்.

67. திரிசூலந் துடி நெற்றித் திவ்விய சோதியைக் கண்ட, வரிசைமிகும் பூபதி நாத் வழங்கினரால் சரஸ்வதிப்பேர்.
(திரிசூலம், துடி, நெற்றிக்கண்—இவை தேவிக்குரியன.)

68. தேவிவர அபயகரம் திகழஉடற் புகக்கண்ட, மேவியசீர் ஆதரென்பார் விளம்பியபேர் ஜகத்ஜனனி.

69. ஆனூர்க்குப் போம்வழியில் ஆவேசந் தேவிசெய, மானேக்கார் யாத்திரிகர் மகிழ்ந்தளித்தார் சீதலாப்பேர்.
(மான்நோக்கு ஆர் யாத்திரிகர்—பெண்களான யாத்திரிகர்.)

70. கரபரிசத் தால் இஷ்டம் காட்சியுறக் காசிப்பூர், வரமளிக்கப் பெறுமன்பர் வைத்தபெயர் கல்பதரு.

71. ஆர்ந்ததுகண் டிதழ்களோர் ஆயிரஞ்சேர் கமலமிசை, தேர்ந்தளித்தார் யோகின்மா சித்கனகா யரெனும்பேர்
(சித்கன காயர்—சின்மயமான திருமேனியுடையவர்.)

72. இவர் பரிச வேதி யென்றோர் எழிற்பெயரை ஈந்தபின்னும், கவர்படுந்தஞ் சபையென்றே காணவாரார் சிவநாதர்.
(கவர்படும்—பிரிவுபடும். சபை—பிரம்மசமாஜம்.)

73. பொறிகளென ஒருகோடி போதன் அயன் அரியெழலால், அறிக சிவா வதாரமென்றார் அன்பர்சன்யால் வைகுண்டர்.
(போதன்—பிரம்மா.)

(தொடரும்)

உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள்

ஞானத்தின் இயல்பு

(256-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞானத்தை அடைந்தவனுடைய மனதைப்பற்றி உங்கட்குக் கூறுகிறேன். அவனுடைய மனத்தின் வருணனைக்கும் அவனைப் பற்றிய வருணனைக்கும் வேறுபாடில்லை. கிளைகளைப் பற்றிப் பேசும்போது மரத்தைப் பற்றியும் பேசியதாகுமன்றோ? நீரைப்பற்றிப் பேசியாய் விட்டதெனில், கடலைப்பற்றியும் பேசியதாகும். ஒளியைப் பற்றி ஆராய்வோமாயின், எல்லா ஒளிக்கும் மூலமான சூரியனும் அதில் அடங்கியதாகும். உடல் உறுப்புகளினின்றும் வேறானதன்று. மண்ணிற் போடும் விதை மரமாக வளர்கின்றது. ஆதலால் இந்திரியங்களின் செயல்கள் யாவும் மனத்தின் முயற்சியால் விளையும் பயனே. அஹிம்சை நெஞ்சில் உதயமாகா விட்டால், இந்திரியங்கள் எப்படி அஹிம்சை நெறியில் நிற்கும்? ஒவ்வோர் இயல்பிற்கும் பிறப்பிடம் மனமே; பிறகு வாய், கை, கண்கள், உடல், செவி, மூக்கு வழியாக அது தன்னை வெளிப்படுத்துகிறது. மனத்தில் இல்லாதது வாயினாற் பேச்சாக ஒருக்காலும் வெளிவராது; விதையின்றிச் செடி வளராதது போல அது. மனம் அழிந்துவிடுமாயின், இந்திரியங்கள் தொழிலை நிறுத்தி விடுகின்றன; பொம்மலாட்டத்தை நடத்தும் கர்த்தா (பொம்மைகளை ஆட்டிவைப்பவர்) இல்லாதபோது, ஆட்டம் நின்றுவிடுவது போல அது நீர் உற்பத்தி யாகும் இடத்திலே வறண்டுபோமானால், அது நதியாக ஓடமுடியாது உடலினின்றும் உயிர் வெளியேறும்போது, உடல் தொழில் செய்வது நின்றுவிடுகிறது. ஆதலால் மனமே இந்திரியங்களின் ஆசைகள் யாவற்றுக்கும் மூலமாக உள்ளது; மனதிலே தொடங்குகிற ஒரு செயலை இந்திரியங்கள் முற்றுப்பெறச் செய்யமட்டும் உதவும், பழுத்த நற்கனியின் மணம் தானாகவே எங்கும் பரவுவது போலவே, மனதை அடக்கியாளும் உணர்ச்சி தானாக வெளிப்படுகிறது. அஹிம்சையே எல்லாவற்றினும் அதிகமாக விரும்பத்தக்க பொருள் என்பதை இந்திரியங்கள் அறியும்போது, அவை அவ்வண்ணமே ஒழுகும். கடலிலே நீர் ஏறும்போது, அதனோடிணைந்த வளை குடாவிலும் நீர் ஏறும். மனம் அஹிம்சையை உணரும்போது, இந்திரியங்களும் அஹிம்சையைப் பெறுகின்றன. ஒரு குழந்தைக்கு அரிச்சுவடியைக் கற்றுக் கொடுக்கும்போது, ஆசிரியர் அக் குழந்தையின் கையைப் பிடித்து ஒழுங்காக அழகாக எழுத்துக்களை எழுதுகிறார். அது போல, மனமும் தனது இரக்கத்தைக் கைகால்கட்கு ஊட்டுகிறது; அவை அவ்வண்ணமே ஒழுகுகின்றன. இந்திரியங்களின் இயல்பு என்பது மனத்தின் இயல்பேயன்றி வேறில்லை. ஆதலால் மனம், வாக்கு, காயங்களால் இம்சையை ஒழித்துவிட்டவன் எவனோ, எவனுடைய செயல்களிலே அஹிம்சை குடிகொண்டிருக்குமோ அவனை ஞானம் பெற்றவனாகத் தெரிந்து கொள்க. அம்மாதிரியான மன நிலையே ஞானம் எனப்படும். அத்தகையவன் அஹிம்சையைத் தவிர வேறெதற்கும் செவிசாய்க்கமாட்டான். அஹிம்சையைப் பற்றியே அவன் எழுதுவான். அஹிம்சையைத் தேடிக் கண்டுபிடிக்க ஒருவன் விரும்பினால், அவன் அத்தகைய மனிதனைக் காணவேண்டும்.

உயர்ந்த ஞானத்திற்குக் கண்போன்று அமையும் சாந்தியைப் (பொறுமையைப்) பற்றி இனிக் கூறுகிறேன். எங்கே எளிமையோடு கூடிய பொறுமையும் இருக்குமோ அங்கே ஞானம் இருக்கும். நீர் நிறைந்த ஏரியில் தாமரைகள் வளர்வது போல, புண்ணியம் செறிந்த இல்லங்களில் செழிப்பு ஓங்குவது போல, ஞானியினிடத்துப் பொறுமை வளர்கின்றது. தனது பிரியப்படித் தயாரிக்கப்பட்ட புது ஆடைகளை அணிவதில் ஒருவனுக்கு உள்ள ஊக்கத்தை போன்று தனக்கு நேர்வது ஒவ்வொன்றையும் ஞானி அதே ஊக்கத்தோடு ஏற்றுக் கொள்வான். தாபத் திரயங்களும் ஒன்று சேர்ந்து அவனது நெஞ்சைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுமாயினும், அதிலே ஒரு சிறிது பயமும் அவனுக்கு இராது. இனிய நிகழ்ச்சி ஏதேனும் உண்டாகும்போது திருப்தியாயிருக்கிறான்; ஆனால் ஏதேனும் தவறாக நிகழுமாயினும், அவன் மனத்தொந்தரவை அடைவதில்லை. பிறர் தன்னைப் புண்படுத்தினும், தனக்குத் தீங்கு செய்யினும், அவன் அமைதியாகப் பொறுத்துக் கொண்டிருக்கிறான். அவன் இன்பத்தையும் துன்பத்தையும் சகித்துக் கொள்ளுகிறான், புகழோ இகழோ வரினும் அவனது மனம் சம நிலையிலுள்ளதாகின்றது. சூடும் குளிரும் அவனைத் தொந்தரவு செய்யா; எந்த நிலையிலும் அவனது உள்ளத்திலே பயம் தோன்றாது. மேருமலை தனது சிகரத்தின் பாரத்தை உணர்கின்றதா? பூமி உயிர்களைச் சுமத்தலை ஒரு சுமையாகக் கருது

கிறதா? அதுபோல, இன்பதுன்பங்கள் எனும் இரட்டை நிலைகள் அவனைத் தொடுவதில்லை, கடல் எவ்வாறு ஏராளமான நீரைக் கொணரும் பற்பல நதிகளையும் நெஞ்சாரத் தயக்கமின்றி வரவேற்குமோ, அதுபோன்றே அவனும் அவற்றை ஏற்பான். எதையும் அவன் மனமகிழ்ச்சியோடு பொறுப்பான்; தனது துயரத்தின் நினைவையும் அவன் மனத்தில் சுமக்கமாட்டான். உடலிற்கு நேர்வதையெல்லாம் அவன் ஏற்றுக்கொள்வான், அதனால் கர்வத்தை அடையான். அகந்தையற்ற பொறுமை எவனிடம் குடிகொள்ளுமோ அம்மனிதன் வாயிலாக ஞானமே பெருமையை அடைகிறது.

நேர்மை என்பது, எது நிகழினும் ஒரே மாதிரி சமநிலையோடு இருத்தல். உட்கார்ந்திருப்பவர்களுடைய முகங்களை ஆராய்ந்த பின் சூரியன் தனது ஒளியைப் பரப்புவதில்லை. ஆகாயம் உலக முழுவதிலும் வேறுபாடின்றிப் பரவி அதை நிரப்புகிறது. அதுபோன்றே ஞானியின் மனதும் பற்பல பக்கட்குத் தக்கவாறு மாறுபடுகிறதில்லை; அவனது ஒழுக்கம் ஒரே மாதிரியாக அமைகிறது. ஒருவன் தன் நண்பர்களைக் கருதுவது போலவே அவன் உலகத்தைக் கருதுகிறான். 'எனது' 'நினது' என்னும் வார்த்தைகளின் உபயோகத்தை அவன் அறியான்; எல்லோரிடத்தும் முற்றும் சமரசமும், தண்ணீரைப் போலத் தாழ்மையும், மனதில் எவ்வித அச்சம் இன்மையும் ஞானியின் இலக்ஷணங்களாகும். அவனது சுபாவம் வாயுவின் சஞ்சாரத்தைப் போல் தடையின்றிச் செல்கின்றது. ஐயமும் ஆசையும் அவனிடம் இல்லை. ஒரு குழந்தை தனது தாய்முன்பு தாராளமாகச் செல்லத் தயங்காததுபோல, அவன் தன் உள்ளத்திருப்பதை மக்கள்முன் கூறத் தயங்கான். தாமரை மொட்டு மலரும்போது, அதன் மணத்தை மறைக்க முடியாது; ஞானியின் மனமும் அதைப் போன்றது. அவனது மனம் அவனுடைய இந்திரியங்கட்கும் முன்னுற் செல்கின்றது; தரைமீது கிடக்கும் ஒரு நகையினின்றும் எழும் கதிர்கள் முதன் முதலாக நமது கண்ணைப் பற்றுவதுபோல் அது. ஒரு குறிப்பிட்ட காரியத்தை அவன் ஒப்புக் கொள்வதா கொள்ளாமலிருப்பதா என்ற ஐயம் சற்றும் அவனது நெஞ்சில் எழாது. எல்லா அனுபவங்களும் அவனுக்கு ஒரே மாதிரியாகவே அமையும். அவனது பார்வையிலே வழு இராது. அவனது பேச்சிலே ஐயம் இராது. அவனது உறவாட்டத்திலே வஞ்சகம் இராது. அவனுடைய இந்திரியங்கள் பத்தும் தாமாகவே தூய்மையோடும் வஞ்சகமின்றியும் தாமாகவே தொழில் புரியும். அவனது மனம் படிகம் போன்று தெளிவாய் இருக்கும். அவனது நெஞ்சின் உணர்ச்சிகள் அமுதம் போன்று இடையருது தாரைப் போலப் பெருகும். அவனிடம் எல்லா குணங்களும் உறைகின்றன. அவனிடம் நேர்மையுள்ளது. அவனிடம் ஞானம் உறைகின்றது.

— தியானேச்வர்.

குருதேவர் உபதேச மணிமாலை

(256-ம் பக்கத் தொடர்ச்சி)

958—காடும் வீடும் ஞானிக்கு ஒன்றே

கட்டிய விரச குளிகையிற் பொன்னாய்க்
காட்டிய விருப்பினை மண்ணை
வெட்டியுட் புதைப்பிற் குப்பைமேட் டெறியின்
விளங்குபொன் னாகவே மிளிரும்,
பட்டதன் பழைய நிலையடையாது;
பரன்சரண் மலரடைந் தவன்பூ
விட்டருங் காடுமேவினு முலக
மேவினு மழுக்குற மாட்டான். 195

(இரச குளிகை-இரும்பைப் பொன்னாக்கும் குளிகை. பூ-உலக வாழ்வு.)

959—ஞானிக்குச் சகவாச தோஷமில்லை

பாலுமம் புனலும் விரைவினிற் கலக்கும்,
பாலையே வெண்ணெயாய்ச் செய்யின்
சாலுமப் புனலிற் கலந்திடா ததனைச்
சார்ந்திடின் மிதந்திடும் வெண்ணெய்;
ஏலுமிச் சீவ னீசனே டொருகால்
இயைந்திடிற் பக்குவ மற்றிப்
பாலுறு சீவ ரொடுபழ கிடினும்
பயிறரு தீங்கினுட் படாதே. 196

(பக்குவம் அற்று இப்பால் உறுசீவர்-பக்குவமிலாது இவ்வுலகில் வாழும் சீவர். பயில்தரு—பழகுவதால் வரும்.)

971—ஞானி கருமத்தைக் கருதான்

மணம்புனை மங்கை மகவினைப் பெறுமுன்
மனைத்தொழில் கருத்துறப் புரிவாள்,
குணம்பெறு மகவைப் பெற்றிடிற் கொஞ்சிக்
குலவுவ ளதனொ டெப்போதும்,
கணம்படு தொழில்கள் புரிந்திடாள்; அதுபோல்
கண்டவை செய்வனஞ் ஞானி,
வணங்தரு மிறையை மனத்தகத் துணரின்
மகிழ்ந்தவன் சேவையே புரிவான். 197

(மகவு-குழந்தை.)

970—ஞானியிடம் கருமங்கள் நழுவும்.

சாற்றிடுஞ் சமாதி சார்ந்தபின் மற்றைச்
சபதபம புவிவிவ காரம்
ஆற்றவு மொழியும், முதன்முத லிவற்றில்
அமைந்திடும் பெருமிதமூக்கம்,
நோற்றிறை தன்னை நெருங்கிடுந்தோறும்
நுவன்றிடு மிவைகுறைந் தொழியும்,
ஈற்றினி லிறைவன் துதியொடு நாமம்
இசைப்பது நீங்கிடு மொருங்கே. 198

(ஆற்றவும்-முழுதும். பெருமிதம்-ஆடம்பரம். நோற்று-தவஞ்செய்து.)

971—ஞானிக்கு பேதம் தோன்றாது

நிலத்துறுங் காலை நெடுமரத் தினையும்
நிலமுறு புல்லைபு நோக்கிக்
கலப்பற வொருவன் வேறுபா டுணர்வன்
கருவரை யிவர்ந்துகீழ் நோக்கின்
உலப்புறும் வேறு பாடுமற் றெல்லாம்
ஒருவடி வாயகந் தோன்றும்,
நலத்திறைக் காட்சி பெற்றபி னுலகில்
நடக்குமோர் வேற்றுமை தோன்ரு. 199

(வரை-மலை. இவர்ந்து-ஏறி.)

973—ஞானிக்கு எல்லாம் ஈசன் மயம்

ஒருவனுக் கிங்கே புத்தமன் காட்சி
யுற்றிடி னுலகுயி ராகி
மருவுவ னிறைவ னென்பது விளங்கும்,
மகவினைக் கண்ணனுய்க் காண்பன்,
கருணைகொள் பெற்ருேர் தம்மிடத் திறைவைக்
கண்டவன் வழிபடு வான்றன்
திருமனை யோடு புணர்கிலன், இறையைச்
சீவரிற் கண்டவர் பணிவார். 200

(உலகு-உலகம். மனை-மனைவி.)

(முற்றிற்று)

சிவானந்த வாணி

(ஆர். ராமகிருஷ்ணன் எம். ஏ., எல். டி.)

பேலூர் மடம் 1929, ஜூலை 21. ஞாயிறு

இன்று ஞாயிற்றுக் கிழமை. குருபூர்ணிமை தினமும் கூட. அதிகாலையிலிருந்தே பக்தர்கள் பலர் மகாபுருஷ மகராஜரைத் தரிசிக்கும் பொருட்டு வரலாயினர். அவரது உடல் நிலை நன்ருக இல்லை. பக்தர் ஒருவர் அவருக்கு நமஸ்காரம் செய்துவிட்டு அவருடைய ஆரோக்கியத்தைப்பற்றி விசாரித்த பொழுது, மகாபுருஷர் இவ்வாறு பதில் புகன்ருர்.

"உடல் நிலை கொஞ்சம் சரியாக இல்லை. அது எவ்வாறு சரியாக இருக்கும்? அன்பரே! இனி நாளுக்கு நாள் உடல் க்ஷீணித்துத்தான் போகும். அது தானே சரீரத்தின் தர்மமாகும். உடல் ஆறுவித மாறுதல்களுக்கு உட்பட்டது — அது பிறக்கிறது, இருக்கிறது, வளர்கின்றது, மாறுகின்றது, தேய்கிறது, மரிக்கிறது. இனி இந்த சரீரம் கொஞ்சம் கொஞ்சமாகக் கடைசி நிலையை நோக்கிச் செல்லும். எல்லா உடல்களுடைய போக்கும் இதுதானே".

பக்தர்: நீங்கள் விருப்பம் மட்டும் கொண்டீர்களானல் உடல் நன்ருக இருக்கும்.

மகாபுருஷர்: இல்லை, அவ்வாறு ஏற்படாது. எல்லா சரீரங்களும், ஒரு நாள் இல்லாது போனலும் இன்னொரு நாள் அழிவுறுவது திண்ணம். இன்ருே ஒரு நூற்ருண்டுக்குப் பிறகோ சரீரம் பறிமுதல் ஆய்விடும் —இது தெரியாதா? தேகத்திற்கு அழிவு வந்தே தீரும். எனது சரீரமும் நீண்ட காலமாக உயிர் வாழ்ந்தாயிற்று—76, 77 ஆண்டுகள் அது இருந்தாயிற்று. இன்னமும் எவ்வளவு காலம் அது இருக்கக்கூடும்? தேகத்திற்கு அழிவு ஏற்பட்டால் அதனல் எனக்கு என்ன! நான் இந்த உடல் அல்லவே. குருதேவர் கிருபை கூர்ந்து இதை எனக்குக் காட்டித் தந்துள்ளார். பஞ்ச பூதங்களால் ஆன சரீரம் பஞ்ச பூதங்களில் கலந்து போகும், நானே திவ்விய லோகத்திற்குச் சென்று விடுவேன். அங்கு மூப்பு இல்லை, மரணம் இல்லை, சுகம் இல்லை, துக்கம் இல்லை

—அது அமிர்த லோகம். இந்த ஞானத்தைக் குருதேவர் கிருபை கூர்ந்து எனக்கு நன்ருக அளித்துள்ளார்; இன்னமும் அளித்து வருகிருர்.

காலே 9-30 மணி இருக்கும், மகாபுருஷ மகாராஜர் பூஜையறைக்குச் சென்று இரு பக்தர்களுக்குத் தீக்ஷை தந்தருளினர் அங்கிருந்து திரும்பி வந்த பிறகு அமைதியாக ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்து கொண்டார். அப்பொழுது பக்தர் ஒருவர் வந்து நமஸ்காரம் செய்துவிட்டு மன வேதனேயுற்ற குரலில், "இன்றும் கூடத் தீக்ஷை தந்தீர்களா?" என்று வினவினர்.

மகாபுருஷர்: "ஆம், குருதேவருடைய திருநாமத்தை அவர்களுக்கு அளித்தேன்".

பக்தர்: "உங்கள் சரீரமோ இவ்வளவு மோசமாக உள்ளது. அத்துடன் தீக்ஷை முதலியன செய்வித்தால் உடல் நிலே இன்னமும் மோசமாகவன்றே ஆய்விடும்!"

மகாபுருஷர்: "நான் என்ன செய்யட்டும், சொல்லுங்கள். மக்கள் மனப்பூர்வமாகத் தீக்ஷைத் தருமாறு வேண்டும் பொழுது, மாட்டேன் என்று கூறி மறுக்க என்னல் முடிவதில்லே. மக்களுடைய ஆவலே நான் காணும் பொழுது என் உள்ளம் கரைந்து விடுகின்றது. சரீரம் உள்ள வரையில் சுக துக்கங்கள் இருந்துகொண்டு தான் வரும். அத்துடன் இந்த உடல் என்றே ஒரு நாள் அழிவுறும் என்பதும் திண்ணம். எனவே எவ்வளவு காலம் சரீரம் உயிருடன் இருக்கின்றதோ அவ்வளவு காலம் அது உலகநன்மையைப் புரிந்து வரட்டுமே. உலக நன்மைக்காக உழைத்துக்கொண்டே சரீரம் மடியுமாஞல் அது மிகவும் நல்லதாயிற்று, ஒரு மனிதனுக்காவது உண்மையான நலம் இந்த சரீரத்தின் மூலம் ஏற்படுமாஞல் அப்பொழுதே சரீரம் நற்பயன் எய்தியதாகும்."

சிறிது நேரத்திற்குப் பிறகு, பக்தர் ஒருவர் வந்து நமஸ்காரம் செய்துவிட்டு மகாபுருஷ மகாராஜரின் அருகில் நின்ருர். அவர் சமீபத்தில் தமது பெற்ருேர் முதலியோருடன் பூரி க்ஷேத்திரத்திற்கு யாத்திரை செய்து திரும்பியிருந்தார். அவர் இவ்விஷயத்தைத் தெரிவித்ததும், மகாபுருஷர் "வெகு நல்லதாயிற்று. உமது தாய் தந்தையாருக்கு இது ஒரு பாக்கியமேயாகும். உமக்கும் ஜகன்னுதருடைய தரிசன பாக்கியம் கிட்டிற்று" என்று கூறிச் சிரிக்கலானர்.

பக்தர்: "நான் முன்பு ஒரு தடவை பூரிக்குச் சென்று தரிசனம் செய்தேன். ஆனல் அப்பொழுது அகாலமாக இருந்தது. அகாலத்தில் தரிசனம் செய்வதனல் ஒரு வித நற்பயனும் ஏற்படுவதில்லே என்று பலர் கூறுகின்றனர்."

மகாபுருஷர்: "இந்தக் கூற்றுக்களிலெல்லாம் எங்களுக்கு நம்பிக்கை இல்லே. பகவானேத் தரிசனம் செய்வதற்குக் காலம், அகாலம் என்று உண்டா, என்ன? எல்லாக் காலமும் அதற்கேற்ற காலம் தான். பகவானே தரிசனம் செய்வதால் அகாலமும் கூட நல்ல க்காலம் ஆய்விடுகின்றது. பகவான் எப்பொழுதும் மங்கள மயமாக இருப்பவர். அவரைத் தரிசிப்பதால் எவ்வாறு அமங்களம் உண்டாகும்?"

இவ்வாறு கூறி, மகாபுருஷ மகாராஜர் பின் வரும் பாட்டைப் பாடலானர்:

இறைவா,

> உனது திருநாமம் மங்களமானது.
> உனது உறைவிடம் மங்களமானது.
> உனது செய்கைகள் மங்களமானவை.
> மங்களத்தை ஆக்குகின்றவன்நீயே.

மீண்டும் மீண்டும் அவர் இந்த கீதத்தைப் பாடிய பிறகு, "விவேகானந்த சுவாமிகள் இந்தப் பாட்டை வெகு நன்ருகப் பாடுவார்" எனப்பகர்ந்தார்.

நமது சிகர ஜோதி

வாழ்க்கையைப் பற்றிய இரு கொள்கைகள்

தற்காலம் நாடெங்கும் சுதந்தர உணர்ச்சி பெற்று விழிப்படைந்துள்ளபோது, ஒவ்வொரு துறையிலும் நாம் இன்னின்னவாறு வாழவேண்டும் என்பதைப்பற்றி அறிவுடையார் பலர் சிந்தித்து வருகின்றனர். இதன் பயனுக அரசியல் திட்டம், பொருளாதாரத் திட்டம், கல்வித்திட்டம், ஸமூக இயல் திட்டம் முதலிய பலவகைத் திட்டங்களேப் பயன்படுத்தி நம் மக்களது வாழ்க்கையைச் செவ்வனே அமைக்க முற்படுகின்றனர். ஆனல்

அரசியல் வாழ்க்கை பொருளாதார வாழ்க்கை ஸமூக இயல் வாழ்க்கை முதலியன மனிதவாழ்க்கையின் பலவேறு பகுதிகளேயாகும்; அன்றியும் ஸமூக வாழ்க்கை தனி மனிதரது வாழ்க்கைகளின் தொகுதியேயாகும். ஆதலின் பலதுறைகளில் திட்டங்களை அமைத்தலைச் சிந்திக்குமுன்பே, அடிப்படையான வாழ்க்கைத் திட்டம் ஒன்றைப் பொதுப்பட வகுத்துக் கொள்ளல் இன்றியமையாததாகும். அத்திட்டமும் வாழ்க்கையின் இயல்பையும் நோக்கத்தையும் முடிவையும் பற்றிய கொள்கையைப் பொறுத்துள்ளதாகின்றது. மனிதனது மனத்திலே ஊறிக் கிடக்கும் அவனது வாழ்க்கைக் கொள்கையே, அவனது திட்டம் ஒவ்வொன்றையும் உருவாக்கி வைக்கின்றது. ஒரு மனிதனிடத்துத் தன்னிச்சையால் நிகழும் எல்லாச் செயல்கட்கும் ஆதாரமாக மனித வாழ்க்கையைப் பற்றிய ஒரு கொள்கை அமைந்து கிடக்கின்றது; அதுவே அறிந்தோ அறியாமலோ செய்யும் அவனது செயல்கள் அனைத்திற்கும் மூலகாரணமாகின்றது, அதுவே அவனை ஆட்டிவைக்கின்றது. அக் கொள்கை பிழையற்றதாயினும், பிழையுற்றதாயினும், உயர்ந்ததாயினும் தாழ்ந்ததாயினும், அதற்கு இயைந்த ஒரு நெறியிலேதான் அவனது வாழ்க்கைத் திட்டம் வடிவெடுக்கும். வாழ்க்கையைப் பற்றிய கொள்கையே பலவகை வாழ்க்கைத் திட்டங்கட்கும் உயிர்நிலையாகும்; அதுவே நாகரிகத்திற்கும் வித்தாகும். ஒரு நாட்டினரின் நாகரிகம் நயக்கத்தக்க வியக்கத்தக்க சிறப்புடையதாவதும், கண்டிக்கத்தக்க வெறுக்கத்தக்க பண்புடையதாவதும், அந்நாட்டு மக்களின் மனங்களை உண்ணின்று இயக்கிவரும் ஒரு வாழ்க்கைக் கொள்கையையே சார்ந்ததாகும். இப்போது உலகிலுள்ள நாகரிக மக்களின் வாழ்க்கையைப் பற்றிக் கொண்டுள்ள கொள்கைகளை நனி ஆராய்ந்து பார்க்குங்கால், அவை இரண்டு வகையாகக் காணப்படுகின்றன; அக்கொள்கைகள் இரண்டும் ஒன்றோடொன்று முரண்படுவன. ஒன்று பௌதிக ஞானத்தைப்பற்றி வரும் மேற்றிசையாரது கொள்கை; மற்றொன்று ஆன்ம ஞானத்தைப்பற்றி வரும் கீழ்த்திசையாரது கொள்கை. ஒன்று தற்கால நாகரிகத்திற்கு வேராவது, மற்றொன்று பண்டைய இந்திய நாகரிகத்திற்கு வேராவது. ஒன்று தற்காலம் உலகெங்கும் நாக்கடிப்பாக வாய்ப்பறை யறைந்து பரப்பப்படுவது, மற்றொன்று நமது நாட்டிலே மதிப்பிழந்து வாயிழந்து தலையெடுக்க வழியின்றித் தத்தளிப்பது. ஒன்று தன் புறவலிமையாலும் வெளிமேன்மையாலும் பிறரை அறை கூவி நின்று இடியென முழங்குகின்றது; மற்றொன்றோ தெற்றென வெளிப்படும் சக்தியின்மையால் உள்ளக மேம்பாட்டோடு மௌனமாக ஒளிர்ந்து கொண்டிருக்கின்றது.

இவ்விரு கொள்கைகளும் ஒன்றோடொன்று முரண்படுவன என்பது வெளிப்படை. மேற்றிசையார் பௌதிக ஞானத்தை (விஞ்ஞானத்தை) மேலும் மேலும் ஓங்கச் செய்து, அவ்வாயிலாக இம்மைக்குரிய இன்பங்களையும் செல்வங்களையும் பெறுதற்குரிய வசதிகளைப் பலவாறு பெருக்கி இவ்வுலக வாழ்க்கையின்பத்தை இயன்றவரை முற்றப் பருக முயன்று வருகின்றனர்; ஆனால் பண்டைக்கால இந்தியரோ உலகியல் அறிவைப் புறக்கணித்து ஆன்ம ஞானத்தை அடைதற்காக இம்மை மறுமைகட்குரிய போகங்களையும் செல்வங்களையும் துறந்து, மனத்தை உண்முகமாக்கி, இயற்கையினின்றும் விலகிச் சாக்ஷியாக நிற்குமாறு தவம் புரியத் தலைப்பட்டனர். இத்தகைய வேறுபாட்டுக்குக் காரணமாவது மனிதனது உண்மையியல்பைப் பற்றிய கொள்கையில் இருதிறத்தார்க்கும் உள்ள வேறுபாடேயாம். இந்தியர் வாழ்க்கையைப்பற்றிக் கொள்ளும் கொள்கைக்கு ஆதாரமாவது: மனிதனது உண்மையான இயல்பு தெய்வத்தன்மை வாய்ந்த ஆத்மாவாயிருப்பதே என்ற முக்கியக் கொள்கையே. கணந்தோறும் மாறிவரும் இயல்பினதாய நிலையற்ற வாழ்விலே மாறாத அழிவற்ற பொருளாகிய ஆத்மாவே மெய்ம்மையாவது என்பது இந்தியரது கொள்கையாக, மாறிவரும் ஒன்றையே மெய்ப்பொருளாகக் கொள்வர் மேற்றிசையார். மனிதனிடத்துள்ள உண்மைப் பொருளாவது அவனது மனயே; ஞானம் இச்சைகிரியையெனும் மூவகைச் சக்திகளையுடைய அம்மனமே உண்மை மனிதன், என்ற கொள்கையை மேற்றிசை மக்கள் உறுதியாகப் பற்றிவருகின்றனர்; ஆனால் இம்மனம் தோற்றமாய் நிற்கும் போலி மனிதனே என்றும், மனத்திற்கும் அப்பாலான அழிவற்ற ஆன்மாவே உண்மை மனிதன் என்றும் இந்தியர் போதித்து வருகின்றனர். மனத்தாற் பெறும் பௌதிக ஞானமே உயர்ந்த ஞானம் என்பர் மேற்றிசையார்; அது பொய்ஞ்ஞானம், மனத்திற்கு அப்பாலான ஆன்மஞானமே மெய்ஞ்ஞானம் என்பர் இந்தியர். வாழ்க்கையைப் பற்றிய இரு

வகைக் கொள்கைகட்கும் உள்ள முக்கியமான வேறுபாடுகள் யாவும், முற்கூறிய அடிப்படையான வேறுபாட்டினின்றே முளைத்தெழுந்து கிளைக்கின்றன.

இந்துமதத்தினுட் பல பிரிவுகள் யூருப்பினும்—துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் எனும் மூவகைச் சித்தாந்தங்கள் இருப்பினும், அவற்றுள் எதுவும் மேற்றிசையாரது கொள்கையைக் குறையாகவே கருதும். எந்த சித்தாந்தத்தின்படியாயினும் உண்மையான மனிதன் ஆத்மாவே யாவான், இந்த உடலும் இந்திரியங்களும் மனமும் அறிவும் சேர்ந்த தொகுதியான ஜீவனல்லன். இந்த ஜீவன் வெளிப்பார்வையாகு ஊனக் கண்ணுக்குத் தோன்றும் மனிதனேயன்றி உண்மை மனிதனல்லன். ஞானக்கண்ணிற்குத் தோன்றும் காட்சியே மெய்க்காட்சி; அக்கண்ணிற்கு மனிதன் உரை மனமிகந்த (மனம் வாக்குகட்கு எட்டாத) ஒண்பொருளாகிய உலவாத ஆன்மாவாகவே காட்சியளிப்பான். துவைத வாதியரது கொள்கையிலும் ஆத்மா அழிவற்றது, தெய்வத் தன்மை வாய்ந்தது. கணந்தோறும் மாறிவரும் பிரவாகநித்திய மெனப்படும் உலகப் பொருள்களிடையே மாறாது அழிவற்ற ஒரு பொருள், ஒரு பாரமார்த்திகப் பொருள் உண்டெனும் கொள்கைக்கு மேற்றிசையாரது அனுபவ வாழ்க்கையைப் பற்றிய எந்தத் திட்டத்திலும் எவ்வித சம்பந்தமும் இல்லை. மேற்றிசைத் தத்துவநூற் சோலையிலே மாறாத பொருளைப் பற்றிய குரல்கள் ஒரோவழி கேட்பது உண்டெனினும், உலக மக்களின் முயற்சிகட்கும் பேறுகட்கும் ஆதாரமாகி, அவற்றை அடக்கியாண்டு ஒழுங்குபடுத்திவரும் மேற்றிசையாரது வாழ்க்கைக் கொள்கைக்கும் அக்குரல்கட்கும் இம்மியேனும் தொடர்பு ஏற்படவில்லை என்பது தோற்றம்.

இத் தொடர்பின்மைக்குத் தக்க காரணமும் உண்டு. அக்காரணமாவது; மேற்றிசையார் பௌதிக ஞானத்தை வழிபடுபவரன்றி தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடுவரல்லர். அவர்கள் தம்மைச் சூழும் இயற்கையைப்பற்றிய ஆராய்ச்சியில் இறங்கியவரேயன்றி, தத்துவம் யாது என்பதைப்பற்றிய ஆராய்ச்சியில் மனஞ் செலுத்தியவரல்லர். புற உலக நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்கி, வகைப்படுத்தி, அவை இன்னின்ன சட்டதிட்டங்கட்கும் விதிகட்கும் கொள்கைகட்கும் அடங்கி நடக்கின்றன என்பதை ஆராயத் தொடங்கிய பௌதிக நூல் நிபுணர் ஒருவாறு வெற்றிபெறவே, அதே முறையை அறிஞர் ஒவ்வொரு துறையாராய்ச்சிக்கும் பயன்படுத்த முன் வந்தனர். மனிதனது அக இயற்கையை ஆராய்தற்கும் இம்முறையைக் கையாள விரும்பிய அறிஞர் மனிதனது நினைவுகளையும் உணர்ச்சிகளையும் அம்முறைப்படியே சோதித்து வரலாயினர். ஐம்புலன்கள் வாயிலாக மனித அறிவிற்கு உணர்த்தப்படும் உண்மைகளை உற்றுநோக்கியும், வரிசைப்படுத்தியும், உய்த்துணர்ந்தும், அவற்றிற்கு அடிப்படையான பொது விதிகளைக் கண்டறிதலிலே கண்ணாயினர் அன்னோர். மனத்தைப் புறமுகமாக்காது அகமுகமாக்கிச் சித்தத்தையும் ஊடுருவி அப்பாற் செல்லும் கூரிய நோக்கினை அவ்வறிஞர் பெற முயன்றாரல்லர். அவ்வாறு மனத்தை உண்முகமாக்குவார்க்கே அறிவிற்கும் அப்பாலாகி, அதற்கு ஆதாரமாகும் அழியாத மெய்ப்பொருளைக் காணக்கூடும் அன்றோ? ஆக, பௌதிக நூன்முறை ஆராய்ச்சி மனத்தைப் புறமுகமாக்கும் பழக்கத்தை வலியுறுத்தி, வியாவகாரிக உலக நிகழ்ச்சிகளையே உற்றுநோக்கியறியும் திறனை வளர்த்து வரலாயிற்று; அதன் பயனாக வாழ்க்கையைப் பற்றிய கொள்கையும் வியாவகாரிக வாழ்க்கை யொன்றையே குறிக் கொண்டதாயிற்று.

இவ் வாழ்க்கையாம் வெள்ளத்திற்கு ஆதாரமாக யாதேனும் அசைவற்ற விகாரமற்ற பொருள் உண்டோ எனும் வினாவை எழுப்புவோமாயின், மேற்றிசையார் உலகியலனுபவ வாழ்க்கைச் சார்பினால் ஒரு விடையையும் கூற முன்வருவர் அது யாதெனில், இவ்வுலகிலுள்ள தனிவாழ்க்கை சமூக வாழ்க்கை இரண்டிலும் விளையும் நிகழ்ச்சிகளின் பயனாக வளர்ந்தும் வலுத்தும் வரும் மண்ணக மனிதவர்க்க முழு வாழ்வே அது என்பர். உலக நிகழ்ச்சிகட்கு அப்பால் நிலையுற்ற அழிவற்ற பொருள் ஒன்று அவர்கட்குப் புலப்படாமையால், வியாவகாரிக உலகப் பொருள்களின் முழுத் தொகுதியையே அத்தகைய பொருளாக அவர்களது அறிவு கருத முயலுகின்றது. மாறும் இயல்புடைய வியாவகாரிக நிலையில்மட்டும் நின்று மனிதனையும் அவனது வாழ்வையும் நோக்குவதில் உள்ள குறையை உணர்ந்து, அதற்கு மாறா இயல்பையணுகியுள்ள யாதோ ஒன்றையேனும் கூட்டக் கருதியதன் பயனாக விளைந்த கருத்தே அந்த மனிதவர்க்க வாழ்வு என்பது. உலகமுழுதும் பரந்துள்ள மனிதவர்க்க வாழ்வு எனும் கருத்து சாதாரண

மக்களது அறிவின் திறமைக்கு மிஞ்சிய பரந்த கருத்தாதலின், அறிவுக்கெட்டிய முறையிலே அதைப் பின்பற்றி அவர்கள் முயலுகின்றனர். தங்கள் தங்கள் நாட்டு மக்களின் வாழ்க்கையளவாக அதைக் குறுக்கிக் கொண்டு, தம் நாட்டு நலனையே முழு மனிதவர்க்க நலனெனக் கருதி தாமே மனித வர்க்கத்திற்குச் சிறந்த முறையில் தொண்டு புரிகின்றனர் எனத் தருக்கித் திரிகின்றனர்; தம் நாட்டு நலனோடு பிறநாட்டு நலன் முரண்படும்போது, மனிதவர்க்கத்தின் பெயரைக் கொண்டே மனிதவர்க்கத்தினைச் சின்னா பின்னமாக்கப் பாடுபடுகின்றனர். பொதுப் படக் கூறின் இதுவே மேற்றிசையாரது நிலைமையாகும்.

மேற்றிசையார் கொண்டுள்ள வாழ்க்கைக் கருத்திலுள்ள பெரும்பிழை இதுவே. அவர்களது பலதிறப்பட்ட பண்பாட்டு வகைகட்கும் நாகரிகச் சிறப்புக்கும் ஆதாரமாக இருப்பது நிலையற்ற வியாவகாரிக வாழ்வேயன்றி, மனிதனது பாரமார்த்திக இயல்பைப் பற்றிய உறுதியான மெய்வாழ்வன்று. இயற்கையை ஆராய்ந்து உண்மையைக் கண்டு பிடிக்கும் பௌதிக நூல் அறிஞரும் இப் பிழையை நீக்க இயலாதவராகின்றனர். ஏனெனில் பௌதிக நூலறிஞர் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப்பற்றியும் வாழ்க்கைக்குரிய சாதனங்களைப் பற்றியுமே ஆராய்ந்து வருகின்றனர்; வாழ்க்கையின் மேற்புறத்திலுள்ள அவ்விரண்டையும் ஒருவாறு அடக்கியாண்டும் வருகின்றனர். வாழ்க்கையின் உண்மையான இயல்பை அறிய, மேற்புற ஆராய்ச்சியை விட்டு ஆழ்ந்து நோக்க வேண்டும்; இதை அவர் செய்ய ஒருப்படார். மனிதனை உண்மையாகச் சீர்திருத்த முயலுவோர் வாழ்வின் இயல்பை ஆராய்ந்து அவனிடமுள்ள அசையாத பாரமார்த்திக இயல்பை வற்புறுத்தி, அதை யொட்டி எழும் சக்திகளைப் பயன்படுத்த வேண்டும்; இத்துறையில் பௌதிக நூலார் இறங்குவதில்லை.

மேற்றிசைப் பௌதிக நூலறிஞர் மட்டுமேயன்றி, உயிர் நூல் அறிஞரும் ஸமூக இயல் அரசியல்களின் அறிஞரும் பௌதிக நூலறிஞரது முறையையே செந்நெறியாகக் கருதிப் பின்பற்றிவருதலின், இவர்களில் எவரும் மனிதனைச் சீர்திருத்தி, அவனது ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் மாண்புடையதாக்கும் நெறியிற் செல்ல இயலாதவராவார். ஏனெனில் வாழ்க்கையின் மேற்புறத்திலுள்ள நிகழ்ச்சிகளே வாழ்வின் முக்கியமான உண்மையான பகுதி என்ற கருத்து அவர்களிடம் வேரூன்றியுள்ளது; ஆனால் உண்மை யாதெனில், இந் நிகழ்ச்சிகள் வாழ்வைப்பற்றிய உண்மையான இயல்பைக் குறிப்பாகக் காட்டுதற்குரிய அடையாளங்களேயாம்; இவை வியாவகாரிக வாழ்விற்கு அடிப்படையாகப் பாரமார்த்திக வாழ்வு ஒன்று உண்டு என்பதை நினைவூட்டி, அதை நோக்கி நம்மைச் செலுத்தும்போது தான், மெய்யாக நமக்குப் பயன்படுகின்றன. ஒரு மரத்தின் இலைகளும் மலர்களும் காய்கனிகளும் நமக்குப் பயன்படுகின்றன, நமக்கு இன்பத்தை நல்குகின்றன; ஆயினும் இவை நன்கு வளர்தற்கும் பெருகுதற்கும் ஏற்பாடு செய்ய விரும்புவோன் இவற்றை ஆராய்வதோடு, இவற்றிற்கு மூலகாரணமான வேர்களின் தொழிலையே சிறப்பாக ஆராய்தல் வேண்டும். வேர்கள் உறிஞ்சும் நீரின் இயல்பை ஆராய்தல் வேண்டும். வேர்களும் நிலவளமும் மரத்தின் வாழ்விற்கு ஆதாரங்களாகின்றன; இவை வெளிப்பார்வைக்குப் புலப்படாவிடினும், மரத்தின் செழிப்புக்கு உயிர்நிலையாகின்றன; இவற்றைச் சீர்ப்படுத்த முயலாது, மலரையும் காய்கனிகளையும் செவ்வையாக்குதல் இயலாது. இதுபோல, வாழ்க்கை நிகழ்ச்சிகளையும். வாழ்க்கையிற் போக வசதிகளைப் பெருக்கும் சாதனங்களையும் மட்டும் ஆராய்ச்சி செய்வதில் முனைந்து நிற்கும் மேற்றிசை யறிஞர் அதற்கு அடிப்படையிலுள்ள வேர்போன்ற வாழ்க்கைத் தத்துவத்தை, பாரமார்த்திக உண்மையை எள்ளளவும் பொருட்படுத்தாதிருத்தலின், வாழ்க்கையின் நிலையான பயனை இழக்கின்றனர். அழியாத மெய்ப்பொருளாகிய ஆத்மனை நாடியனுபவிப்பதை விட்டு, மேலெழுந்த வாழ்விலுள்ள ஐம்புல இன்பங்களையும் அவற்றிற்குச் சாதனமாகும் இம்மைச் செல்வங்களையும் ஓய்வின்றிப் பெருக்குவதிலே பேராசை வெறி கொள்கின்றனர். இம்மையின்பங்களையும் செல்வங்களையும் பெருக்கும் வழியைப் போதிக்கு முன், மக்களால் அடைதற்குரிய நிலையான பேரின்ப வாழ்வு அவற்றிற்கு அப்பால் உள்ளது என்பதையும், அப்பேரின்ப வாழ்வைப் பெறுதற்குத் துணையாகும் அளவுக்கு மட்டும் இம்மைப் பேறுகள் இன்றியமையாதன என்பவையும், உலக முழுதின்மீதும் தனியரசு செலுத்தும் பேறும் ஆன்மாவை உணராமையால் வரும் அளிப்பரும் பெரும் நஷ்டத்திற்கு இம்மியேனும் ஈடு செய்யாது என்பதையும் போதித்தல் அவசியம். அழியாத ஆன்மாவைப் பொருட்படுத்தாது இம்மை வாழ்வை வெறிகொண்டு நாடு

வதைத் தவிர்த்து, பாரமார்த்திக ஆன்ம வாழ்வில் நாட்டம் வைத்து, இம்மை வாழ்வில் பெற்றதே போதும் எனும் திருப்தியை நிலை நாட்ட அவர்கள் முயலவேண்டும்; அப்போதுதான் அவர்களது வாழ்வு நிலையான பண்பையும் பயனையும் நல்கும் திறமையையும் பெறுவதாகும்; அவர்களது பண்பாடும் நாகரிகமும் நிலமிசை நீடு வாழும் தன்மையனவாகும்.

அமர நன்னிலையை இம்மையிலே எய்துதற்காகப் பரதமா நாடு பின்பற்றி வந்த வாழ்வுத்திட்டத்திலே, போதுமென்ற மனமே பெருஞ் செல்வமாகவும், ஓயாத அவாவே தீராத வறுமையாகவும் கருதப்படலாயின. பாரமார்த்திக வாழ்வை உயிராகவும், வியாவகாரிக வாழ்வை உடலாகவும் கருதி வாழ்ந்தனர் நமது நாட்டினர். மனிதனது உடல் பொறிகள் மனம் இவற்றின் முயற்சிகள் அனைத்தும் மனிதனது ஆன்ம வாழ்வினை நாடுதற்குரிய சாதனமாக வேண்டும் என்பதே, பரதமா நாட்டினரது வாழ்க்கையைப் பற்றிய கொள்கையில் அமைந்த அடிப்படைக் கருத்து. மனிதனது உண்மையான வாழ்வு ஒரு வட்ட வரையின் மையமாகிய புள்ளியில் உள்ளது; அவனது போலி வாழ்வு அவ்வட்டவரையிலே சுற்றிச் சுற்றி வருதலில் உள்ளது. வியாவகாரிக வாழ்விலே முன்னேற்றமெனக் கருதப்படுவது, மையத்தை நாடாது புறவாழ்விலே ஒன்றை விட்டு இன்னொன்றைப்பற்றி ஓயாது வெறிகொண்டு சுற்றிச் சுற்றி உழலும் வாழ்வேயாம்; இது உண்மையான முன்னேற்றமாகாது. மையத்திலே நாட்டங்கொண்டு, வட்டவரையிற் செல்வதைப் பொருட்படுத்தாது, மெல்ல மெல்ல மையத்தை அணுகுவதே மெய்யான முன்னேற்றமாகும். வட்டவரையிற் செல்லும்போதே மையத்தின்மீது நோக்கினை நிறுத்தி, வட்டத்தின் அகலத்தை வரவரக் குறுக்கி, வேகத்தைக் குறைத்து, மையத்தினை நோக்கி நெருங்குவதே வாழ்வின் மெய்யான இலக்ஷியமாகும். மனத்தையே உண்மையான மனிதனாக எண்ணி வாழ்வை நடத்தும் மேற்றிசையாரது கொள்கை பொருளைப் புறக்கணித்து, அதன் நிழலைப் புல்குவாரது செயலைப் போன்றதாகும். ஆன்மாவையே உண்மை மனிதனாக எண்ணிப் பாரமார்த்திக வாழ்வையே வாழ்க்கையின் மெய்ப் பயனாகக் கருதிய பண்டைய இந்தியரது வாழ்க்கைத் திட்டத்தை விரிவாக எடுத்துக் காட்டுதல் தற்சமயம் நமது மக்கட்கும் வேண்டப்படுவ தொன்றாகின்றது; ஆதலின் அவ்வாழ்க்கைத் திட்டத்தின் சிறப்பியல்புகள் இனிக் கூறப்படுகின்றன.

இந்தியரது வாழ்க்கைத் திட்டத்திலே, இன்பம், பொருள், அறம் எனும் மூன்றையும் நாடிப் பொதுவாக இயற்றப்படும் மனிதருடைய முயற்சிகள் அனைத்தும் ஏனைய நாட்டு மக்களது வாழ்க்கையிற்போல் இடம் பெறுகின்றன என்பதில் ஐயமில்லை; எனினும் இவை மூன்றும் தத்தம் நிலையிலே மிக உயர்ந்த பொருள்களாகக் கருதப்படுவதில்லை; அவற்றை ஏராளமாகப் பெறினும், வாழ்க்கையின் மெய்ப்பயனை அடைந்ததாக மக்கள் கருதார். அவற்றை நாடுவதில் அடங்கிய கருத்தாவது, அவை ஞானத்தைப் பெறுதற்குத் துணையாகும் என்பதே; ஆதலின் அவை ஞானத்திற்கு இடையூறாகாத வண்ணம் நாடவும் போற்றவும் படல் வேண்டும்; இது தனி வாழ்க்கைக்கும் ஸமூக வாழ்க்கைக்கும் ஒருங்கே பொருந்தும். எனவே, முக்தியே மிகவுயர்ந்த உறுதிப் பொருளாக (பரம புருஷார்த்தமாக) மனிதராற் கருதிப் பெறத் தக்கதாகும் என்பதே முடிபு. இம் முடிபுக்கேற்ப மனிதனது வாழ்க்கையில் நிகழும் ஏனைய முயற்சிகள் யாவும், ஞான நோக்கத்திற்கு (முக்தியடையும் நோக்கத்திற்கு) அடங்கி, அதனோடு முரணாது நடைபெற வேண்டும். மெய்ப்பொருளாகிய ஆத்மாவே மனிதனது உண்மையியல்பாதலின், எல்லா முயற்சிகட்கும் உயிராயும் பயனாயும் அமைவது அதுவே; ஆத்மாவை மறந்து செய்யும் முயற்சிகள் எல்லாம் தற்கொலையேயாகும். ஆதலின் மரணமில்லாப் பெருவாழ்வு வாழ விழையும் இந்தியன் தனது ஸமூக இயல் அரசியல் பொருளாதார இயல் கல்வி முதலானவற்றோடு சம்பந்தமான வாழ்க்கைகளில் நாடுவது எதுவாயினும், அதன் பண்பும் மதிப்பும் அதிகாரமும் ஞான நோக்கத்திற்கு உட்பட்டே வரையறுக்கப்படும். ஞான நோக்கமே வாழ்க்கைக்கு அச்சாதலின், வாழ்விலுள்ள முயற்சிகள் எல்லாவற்றிற்கும் அதுவே ஆதாரம்; அதன் ஆட்சிக்கு உட்பட்டே அவை பற்றப்பட வேண்டும்; அந்த நோக்கத்திற்கு முரண்பாடாக எவ்வித முயற்சியும் நிகழ்தல் ஒண்ணாது. மேற்றிசையாரது வாழ்வுத்திட்டத்திலே செல்வத்தையோ சுகத்தையோ அரசியல் சுவாதீனத்தையோ நாடுவது போன்றே ஞானத்தையும் நாடுவது உண்டு எனினும், அரசியல் வாழ்க்கையிலோ ஸமூக வாழ்க்கையிலோ நாடும் ஒரு பேற்றுக்கு உள்ளடங்கியே அவரது ஞானப் பயிற்சி நடைபெறும்; அப்பேற்றுக்காக

ஞான முயற்சியைக் கைவிடுதலும் இயல்பாகும்; ஏனெனில் ஞான வாழ்வே அவர்க்குப் பரமார்த்தம் (உயர்ந்த பேறு) ஆவதன்று, இந்திய வாழ்க்கையிலோ மனித முயற்சிகள் யாவற்றையும் உண்டாக்குவதும் வளர்ப்பதும் நெறிப்படுத்துவதும் ஞான முயற்சியெனும் பரமார்த்தமேயாகும்; மனிதன் யாதொன்றை இயற்றிடினும் நாடினும் அது அவனை நிலையற்ற பொருள்களினின்றும் விடுவித்து, நிலையான பரம்பொருளில் உய்த்தல் வேண்டும்; ஒருவன் தனது இன்பத்தையும், செல்வத்தையும், அறத்தையும், உயிரையும் கைவிடுதலைப் பெறலரும் பேருகவே கருதுதல் வேண்டும். சுருங்கச்சொல்லின், வியாவகாரிக வாழ்க்கையில் ஞானமே சர்வாதிகாரியாதல் வேண்டும்.

ஞானம் ஸர்வாதிகாரியாகும்போது, ஸமூக வாழ்க்கையில் முன்னேற்றம் எவ்வாறமையும் என்பதை இனிக் கவனிப்போம். இந்தியாது வாழ்க்கைத் திட்டப்படி ஸமூக முன்னேற்றமென்பதற்குப் பொருள், ஒவ்வொரு மனிதனுக்கும் இவ்வாழ்க்கையிலே உடலாலும் அறிவாலும் பெறக்கூடிய இன்பத்தை நாடுதலிலே அவனது திறமையும் சுதந்திரமும் வளர்ந்து வரவேண்டும் என்பதன்று; அந்த ஸமூகத்தின் முக்கிய நோக்கமாகிய பாரமார்த்திக வாழ்வினை (ஆன்மாவை நாடும் வாழ்வினை) நாடுதற்கு உதவியாகும் நிலையினில் தனது ஸமூக வாழ்க்கையை அமைத்தலிலே அவனது திறமையும் சுதந்திரமும் பெருகி வரவேண்டும் என்பதே. ஸமூக வாழ்க்கையில் ஒருவன் பெறும் மதிப்பு அவனது உலகச்செல்வத்தின் அளவைப்பொறுத்ததன்று; ஏனெனில் மிகப் பெருஞ் செல்வம் படைத்தவனும் ஸமூகத்திலே மிக்க வறுமையுடையோனுக்குப் பணி செய்யக் காத்திருக்க நேரும்—மணிமுடி வேந்தனும் மயிர்முடி முனிவனை ஆண்டிக்கும் பணிசெய்யக் கைகட்டி நிற்பான். ஸமூக வாழ்விலே உயர்ந்த மதிப்பைப் பெறுந் தகுதிக்கு இம்மைக்குரிய சீரும் சிறப்பும் ஆடம்பாமும் அதிகாரமும் அறிகுறிகளாகா. ஸமூக வாழ்விலே ஒருவற்கு மதிப்பையும் பிறாாற் போற்றப்படும் பெருமையையும் அதிகப்படுத்துவது யாதெனில், அவனிடத்துள்ள அக வாழ்க்கையில் அவன் பெறும் ஞான முன்னேற்றமே. இந்த ஞான முன்னேற்றமே அவனை ஸமூக வாழ்க்கையிலே மிக்க திறமையுடையவனுக்கும், மிக்க சுதந்திரமுடையவனுக்கும்; எவ்வாறெனில், ஸமூகத்தின் முக்கிய நோக்கத்தோடு ஒருவன் தன்னேக்கத்தை ஒன்று படுத்திக்கொண்டு வாழும் திறமை வளரும்போதுதான் ஸமூகத்திற்காக வாழும் திறமை அவனுக்கு வளரும்; ஸமூக நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டுத் தனது வாழ்விலே ஞானமில்லாத பிறவுலகச் சார்புடைய நோக்கங்களினின்றும் தன்னை மேலும் மேலும் விடுவித்துக்கொள்ள முயலுவதினல் அவனே மிக்க சுதந்திரமுடையவனுமாவான். ஞான முன்னேற்றம் பெறுவான் அவ்வாறு மதிக்கப்படினும், உலக வாழ்க்கைக்குரிய நன்மைகளையடையத் தனக்கு உரிமையுண்டென்று கருதமாட்டான் பிறப்பாலும் செல்வத்தாலும் அதிகாரத்தாலும் சில உலக வாழ்க்கைக்குரிய நன்மைகளை அநுபவிப்போரும் அக்காரணம் பற்றியே சமூக வாழ்விலே மிக்க மதிப்பைப் பெறமாட்டார். சமூக வாழ்க்கையிற் பின்பற்றப்படும் ஆசார அநுஷ்டானங்கட்கும் தொழில்கட்கும் சமூக வாழ்வில் மதிப்பையும் திறமையும் சுதந்திரத்தையும் தீர்மானிக்கும் கொள்கைகட்கும் யாதொரு சம்பந்தமும் இராது. சமூகத்தாரில் ஒரு பிரிவினர் தமது ஞான முன்னேற்றத்தால் சமூக வாழ்வுத் திறனை (முற்கூறிய பொருளில்) பெருக்கக் கொள்வாராயின், அவர் சமூக வாழ்விலே உயர்ந்த மதிப்புக்கு உரியவராவார். உயர்ந்த நிலையினை எய்துபவராவார். தாழ்ந்த வருணத்தார் பண்டை நாளிலே உயர்ந்த வருணத்தராகக் கருதப்பட்டு மேன்மையெய்தியது இந்திய சமூக வாழ்க்கைத்திட்டத்தின் மாண்புக்கே சான்றாயிற்று இன்னும் இந்திய சமூக வாழ்க்கை ஞான வாழ்வெனும் நோக்கத்தை நிறைவேற்றும் நெறியைத் திறமையோடும் சுறுசுறுப்பாகவும் பின்பற்றுமாயின், அதனல் ஸமூக வாழ்வின் ஆக்கத்திறன் மிகும்; அதனல் மேற்றிசையாரின் சமூக வாழ்க்கை இலக்ஷியங்களைப் பின்பற்ற முயலுவதால் வரும் கேட்டையும் வெல்லக்கூடும். நமது சமூக வாழ்க்கைக்குரிய முயற்சிகள் அனைத்தும் ஞான நோக்கத்தின் ஆட்சிக்கு அடங்கி நடைபெறுமாயின், நமது ஸமூகம் முன்னையினும் பன்மடங்கு சிறப்புற்றொளிரும்.

இந்தியாது பொருளாதார இயல் வாழ்க்கையிலும் ஞானத்திற்கே ஸர்வாதிகாரம் கொடுக்கப்படுகின்றது. செல்வத்தைக் குவிக்கும் பேராசையை ஞான வாழ்விலுள்ள விழைவு தடுக்கிறது; இவ்விழைவை நிறைவேற்றுதற்கு எளிய வாழ்வே மிக அநுகூலமாகக் கருதப்படுகிறது. அறவழியிற் பெருத செல்வமும் இன்பமும் வறுமைக்கும் துன்

பத்திற்குமே ஏதுக்களாகக் கருதப்படும். அறவழியாற் பெற்ற மிகப் பெருஞ் செல்வமும் ஞான வாழ்க்கைக்கும், அதனைப்பின் பற்றுவார்க்கும் பயன்படல் வேண்டும் என்பதே கொள்கையாகும்: ஒரு யாகம் பூர்த்தி பெறும்போது முன் தொகுத்த செல்வம் முழுமையையும் தானமாக வழங்குதலே முன்னாளிலே ஓர் அரசனுக்குப் பெருத்த புண்ணியத்தைத் தருவதாயிற்று. அறவழியால் அதனைப் பலர்க்கும் வழங்குதலும் சமூக வாழ்க்கைக்கு அவசியமாகக் கருதப்படுகின்றது. 'ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறுவாளன் திரு' என்பது போன்று, செல்வம் உலகத்தார்க்குப் பயன்படும் துறைகளிலே செலுத்தப்படுகின்றது. நாட்டின பொருளாதார நிலைக்கு அஸ்திவாரமாகக் கிராமத்தாரின் எளிய வாழ்வே அமைவதாகிறது; யந்திரங்களும தொழிற்சாலைகளும் பணத்திலுள்ள பேராவாவிற்கே உதவியாகின்றன. பொருளாதார வாழ்வை ஞானத்தின் ஆட்சிக்கு உட்படுத்தும்போது, பொருளாளா—தொழிலாளர் போட்டி ஒழிகிறது. ஞானத்தை நாடுதற் பொருட்டு சமூக வாழ்விற்கு இன்றியமையாத உணவு, உடை, முதலிய வசதிகளை உண்டாக்குதல் சமூகத்திற்குக் கடமையாக விதிக்கப்படுகிறது. சமூக வாழ்க்கையில் ஞான ஆட்சி நடைபெறுவதாயின, தற்கால வாழ்விலே நாடுகட்குள் பரஸ்பரம் போட்டி நிகழும் இக்காலத்திலும், அதற்கியைய பண்டைய பொருளாதார இலக்ஷியங்களை ஒருவாறு மாற்றியமைத்தலே போதியதாகும். அவசியமாகாத அன்னிய நாட்டுப் பொருள்களை விலக்க அரசாங்கத்தாரது பாதுகாப்புச் சட்டத்தின் துணையும் வேண்டியதன்று; ஞான வாழ்க்கையின் கட்டாயத்திற்கு உட்படும் மக்கட்கு அக்காரணத்தாலேயே பிறநாட்டுப் பொருள்களின் மீதுள்ள விருப்பம் தானாக நீங்கும்; அவற்றை விலக்குதலும் இயல்பாகும்.

இந்திய வாழ்க்கைத் திட்டத்திலே அரசியலின் பண்பையும் இனி ஆராய்வோம். குடிகட்குத் தருமங்கள் (கடமைகள்) இருப்பது போல, அரசாங்கத்தார்க்கும் தருமம் (கடமை) உண்டு; அத்தருமமும் ஞானத்தின் ஆட்சிக்குட்பட்ட பல துறைகளில் ஒரு துறைக்கு ஏற்பட்டதாயிற்று. அரசாங்கத்தின் கடமையெல்லாம், ஞானத்தின் ஆட்சிக்கு உட்பட்டு நடைபெறும் சமூக வாழ்க்கையமைப்பிற்கு உள்நாட்டினின்றோ வெளிநாட்டினின்றோ இடையூறுகள் விளையாத வண்ணம் பாதுகாத்தலொன்றேயாம். அரசாங்கம் ஒரு புதிய வாழ்க்கைத் திட்டத்தை அமைக்கும் கடமையைப் பெறுவதில்லை; ஞான நோக்கத்தோடு அமைக்கபபட்ட ஓர் அமைப்பைச் செவ்வனே பாதுகாத்து வரும் கடமையையே பெறுகின்றது. மக்கள் தமது வாழ்க்கைத் திட்டத்தை ஞான ஆட்சிக்கு ஏற்றவாறு அமைத்துக்கொண்டு, தமக்குரிய சுவதர்பங்களைப்—கடமைகளைப்—பின்பற்றுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பர். சமூகப் பிரிவினர் பலரும் தத்தம் கடமைகளை ஞான முன்னேற்றங் கருதி இயற்றி வருதலின், ஒரு பிரிவினரது கடமை பிற பிரிவினரது உரிமையாகக் கருதப்படுதலின், உரிமையுணர்ச்சியும் உரிமையை வர்புறுத்தலும் இன்றியே, சமூகம் அவசியமான உரிமைகளை உரிய அளவிற்குப் பெற்று மகிழ்தற்கு ஏது உண்டாகிறது. அரசாங்கத்தாரைச் சார்ந்து வாழாது மக்கள் தற்சார்ந்து வாழும் பெருமை இந்தியர்க்கு அமைந்த இணையற்ற பெரும் சிறப்பாயிற்று. நம் நாட்டு மக்கள், பொருளுக்கும் அதிகாரத்திற்கும் போட்டி போட்டு வாழும் மற்ற நாட்டினரைப் போன்று அரசியலில் சர்வாதிகாரத்திற்கு உட்படாது, உய்ந்தனர்; காரணம் யாதெனில், பொருளும் அதிகாரமும் சிற்றின்பமும் நிலையற்றன என்னும் பேருண்மையை அவர்கள் நன்கறிந்திருந்தனர் என்பது தான். சுய நலமும் போட்டியும் உலக ஆசையும் நிறைந்த வாழ்க்கை நெறிகளைப் பின்பற்றி அடியோடு தமது நாடு அழிய வேண்டும் என்பது இந்தியரது எண்ணமன்று. ஞானத்தின் சர்வாதிகாரத்திற்குப் பதிலாக, சமூக வாழ்க்கையில் அரசியலுக்கு அதை அளிப்பதாயின், இந்திய நாட்டின் உயிர் நிலைக்கே ஆபத்துவரும்; அதனால் அது அழிவடையும் நிலைமையும் வரக்கூடும்.

இந்தியரது வாழ்க்கைக் கொள்கையும் வாழ்க்கைத் திட்டமும் அழிவற்ற ஆன்மாவையே ஆதாரமாகக் கொண்டுள்ளதாதலின் இந்திய சமூகமும் நீண்ட கால வாழ்வினைப் பெறுவதாயிற்று. மேற்றிசையாரது கொள்கை மனிதனது மனத்தையே ஆதாரமாகக் கொண்டுள்ளதாதலின், அன்னாது சமூக வாழ்வில் இன்பமும் பொருளும் அதிகாரமுமே வாழ்க்கையின் இலக்ஷியங்களாகின்றன; இவர்கள் வியாவகாரிக வாழ்வையே மேலானதாகப் போற்றி வருகின்றனர். பாரமார்த்திக வாழ்வா, வியாவகாரிக வாழ்வா? — இதில் எதைப் பின்பற்றுதல் ஆன்ற நலனை நல்கும் என்பதே கேள்வியா

கின்றது. இந்திய நாட்டின் பண்டைய சரித்திரத்தையும் மேற்றிசையாரின் தற்கால வரலாற்றையும் ஒப்பிட்டு, முந்தினதின் உயர் தனிக் கொள்கையை உய்த்துணர்வாராக!

பேரின்ப வாழ்வு

E. V. சோமசுந்தரம், B.A.

பகுதி மூன்று

உள்ளத்தேறுதல்

அத்யாயம் 1.

நம்பிக்கை உள்ளவர் உள்ளத்தில்
இறைவன் இன் சொல்லாடல்.

'என்னுள்ளே ஆண்டவன் என்ன உரைக்கின்றாரோ அதையே செவிமடுப்பேன்' என்கிறது அருட்கீதம்.

தன்னுள்ளே இறைவன் இன்சொல்லாடலைக் கேட்டு, ஆண்டவன் திருவாயால் ஆறுதல் மொழியைப் பெறும் ஆன்மா அருட்பேறு பெற்றதாகும்.

இவ்வுலகம் காதுக்குள் ஓதும் பேச்சுகளிற் சிறிதும் கவனம் செலுத்தாது, இறைவன் நமக்குள்ளே பேசும் மெல்லிய குரலை மகிழ்ச்சியுடன் ஏற்கும் காதுகள் அருட்பேறு பெற்றவையாம்.

புறத்தே எழுகின்ற குரல்களைக் கவனியாது தனக்கு உள்ளே அகமுகமாக அறிவுறுத்தும் மெய்ப்பொருளையே கவனிக்கும் காதுகள் உண்மையாகவே அருட்பேறு உடையவை.

புறவுலகப் பொருள்களைப் பார்க்க முடியாது மறைபட்டு, ஆனால் நிலையான பொருள்களைக் காண்பதிற் கருத்தூன்றி யிருக்கும் கண்கள் அருட்பேறு உள்ளவை.

அக வாழ்விலும் ஆன்மீக அனுபவங்களிலும் ஆழ்ந்து நெடுந்தூரம் சென்று தெய்வீக இரகசியங்களைப் பெறுவதற்காக நாள்தோறும் ஞான சாதனப் பயிற்சிகளால் மேலும் மேலும் தங்களைத் தகுதியாக்கிக் கொள்ள முயல்பவர்கள் அருட்பேறு அடைபவர்களாம்.

'ஆண்டவனுக்காகச் செலவிடுவதற்கென நேரத்தை ஒதுக்குதலுக்கு மகிழ்ச்சி கொள்ளவும் உலக விஷயங்களின் தடைகளை உதறித் தள்ளவும் கூடியவர்கள் அருள் நிலை எய்தியவர்கள்.

2. ஓ! என் உயிரே! இவ்வருட்பேறுகளைக் கருதுவாயாக, இவற்றைக் கவனித்து, உனது புலன் நுகர்ச்சி அவாக்கள் நுழையும் வாயிலை மூடி விடு; அதனால் உனக்குள்ளே உனது நாயகனாகிய ஆண்டவன் சொல்வதைக் கேட்க வசதி வாய்க்கும்.

என் ஆருயிரே! உனது அன்பன் கூறுகிறான்:— 'நானே உனது கதி மோட்சம். உனது அமைதி நிலை, உனது உயர் நிலை, எனது அருகிலேயே நீ இருப்பாயாக. அப்போது நீ அமைதியைக் காண்பாய்!

விரைவில் அழியும் அற்பப் பொருள்களையெல்லாம் போகவிட்டு, என்றைக்கும் இருக்கும் உறுதிப்பொருள்களைத் தேடு.

இவ்வுலகப் பொருள்கள் அனைத்தும் நம்மை ஏமாற்றிச் சிக்கவைக்கும் கண்ணிகளே அன்றி வேறு என்ன? உன்னைப் படைத்த ஆண்டவனால் நீ கைவிடப்பட்டாயானால் உலகத்திலுள்ள உயிர்கள் அனைத்தாலும் என்ன நலன் பெறப் போகிறாய்?

ஆதலால், இறைவனைத் தவிர மற்று எல்லாவற்றையும் விட்டுச் செல்; உன்னைப் படைத்த இறைவனை இன்புறுத்த உழைப்பாயாக. அவ்வாண்டவனிடம் நன்றி கூர்வாயாக. இவ்வாறு செய்யின் உண்மையான அருள் நிலைமை எய்தும் திறமை பெறுவாய்.

அத்தியாயம் 2.

சொல்லோசை இன்றி உள்ளத்தே
உண்மை உரையாடல்.

இறைவனே! பேசி அருள்க! நின் அடியவன் செவியாரக் கேட்கக் காத்திருக்கிறேன். நான் உனது அடியவன். நீ கொடுத்தருசுக்களை நான் அறியும்படி எனக்குப் பகுத்தறிவை அளித்தருள்க.

உனது திருவாயின் திருமொழிகளின்பால் எனது உள்ளத்தைத் திருப்பி அருள்க. உனது பேச்சு பனியைப் போல் படியட்டும்.

பண்டை மக்கள் தங்கள் தலைவரிடம் 'நீரே எங்களிடம் பேசும். நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். ஆண்டவன் எங்களிடம் பேச வேண்டாம். அப்பேச்சால் நாங்கள் இறந்து விடுவோம், என்றார்கள்.

அப்படி நான் சொல்லவில்லை ஆண்டவனே! அதுவல்ல என் கோரிக்கை. நான் வேண்டிக் கொள்கிறேன். மற்றொரு பெரியாரின் வேண்டுகோளைப் போல நானும் பணிவுடனும் ஆர்வத்துடனும் மன்றாடி வேண்டிக் கொள்வதாவது: பேசுக! இறைவனே, உமது அடியவன் செவிமடுக்கக் காத்திருக்கின்றான்!

பண்டைப் பெரியாரும் பேசவேண்டாம். மற்று எந்தத் தீர்க்க தரிசிகளும் என்னிடம் பேசவேண்டாம். ஆனால் அதற்கு மாறாக ஓ ஆண்டவனே! தீர்க்க தரிசிகள் அனைவருக்கும் ஆவேசம் அருள்பவரும், அறிவொளி தருபவருமான ஓ இறைவனே! நீர் மட்டும் பேசுக. ஏனெனில் அவர்களின்றி நீரே எனக்கு முழு உபதேசமும் அருளக்கூடும். ஆனால் அவர்களோ உம்மை அன்னியில் ஒரு பயனும் நல்கக்கூடியவர்கள் அல்லர்.

2. அவர்கள் உண்மையாகச் சொல் ஓசைகளை எழுப்பலாம். ஆனால் அவர்களால் ஆன்மீக வளர்ச்சி தரமுடியாது. அவர்கள் மிக அழகாகப் பேசலாம்! ஆனால் இறைவனே தங்கள் அருள் இன்றேல் அப்பேச்சுக்கள் நெஞ்சில் ஞானத்தை மூட்டுவதில்லை.

அவர்கள் பொருள்களைப்பற்றிய எழுத்துக்களைப் புகல்கிறார்கள். ஆனால் தாங்கள் அவற்றின் கருத்தை விளக்குகிறீர்கள். அவர்கள் மறைபொருள்களைச் சொல்கிறார்கள். ஆனால் தாங்களோ பூட்டி வைக்கப்பட்டவைகளின் பொருளைத் திறந்து வெளிப்படுத்துகிறீர்.

உமது ஆணைகளை அவர்கள் எடுத்து உரைக்கிறார்கள். ஆனால் நீரோ அவற்றின்படி நடக்க எங்களுக்கு உதவி புரிகிறீர்கள்.

அவர்கள் செல்ல வேண்டிய பாதையைக் குறிப்பிடுகிறார்கள். ஆனால் நீரோ அந்நெறியிற் செல்ல எங்களுக்கு உரன் அளிக்கிறீர்கள்.

அவர்கள் செய்யக்கூடியது புற உலகில் மட்டுமே. ஆனால் நீரோ உள்ளத்தை ஒளிர வைத்து அறிவுறுத்துகிறீர்.

அவர்கள் மேலே தண்ணீர் விடுகிறார்கள். ஆனால் நீரோ பயன்தரும்படி செய்கிறீர்.

அவர்கள் உரத்த குரலுடன் வார்த்தைகளைச் சொல்கின்றனர்; ஆனால் நீரோ, யாம் கேட்டுப் பொருள் அறிந்து கொள்ளுமாறு அறிவுறுத்துகிறீர்.

எத்தலைவரும் எனக்கு அறிவூட்ட வேண்டாம். ஆனால் நீர் மட்டும் எனக்கு அறிவுறுத்துவீராக. ஓ ஆண்டவனே! என் கடவுளே, அழியாத உண்மைப் பொருளே, உள்ளக் கிளர்ச்சி பெறாமல், வெளி எச்சரிக்கை மட்டும் பெற்று, நான் பயன் அற்றவனாகி மடிந்து போகாமல் இருக்கும்படி நீரே எனக்கு அறிவு ஊட்டுவீராக.

நல்லறிவுரைகளைக் கேட்டு விட்டு அதன்படி நடவாமைக்கும், நல்லவைகளை அறிந்தும் அவற்றை விரும்பாமைக்கும், நல்ல நெறியை நம்பியும் அந்நெறியில் செல்லாமைக்கும் நான் கண்டிக்கப் படக்கூடியவனாக ஆகிவிடாமல் காத்து அருள்க.

ஆண்டவனே, திருவாய் மலர்ந்து அருளுவீராக. நுமது உரையை அடியவன் கேட்கக் காத்திருக்கிறான். ஏனெனில் அழியாத பெருவாழ்வைப் பற்றிய சொற்கள் நும்மிடம் இருக்கின்றன.

எவ்வளவு குறைபாடு உள்ளதாயினும் இந்த என்னுடைய உயிரின் ஆறுதலுக்காகவும், என் முழு வாழ்வும் திருந்துவதற்காகவும், தங்கள் பெருமையும், புகழும், என்றுமிருக்கும் திருவருட் பெருக்கும் விளங்குவதற்காகவும் நீரே என்னிடம் பேசியருள்வீராக.

இந்துமத ஸாரம்

(278-ம் பக்கத் தொடர்ச்சி)

தருமம் (அறம்) இறுதியிலே வெல்வது திண்ணம்; பேராசை, காமம், பொறாமை, அகந்தை முதலிய தீய இனத்தைச் சேர்ந்தன யாவும் நெடுநாள் எதிர்த்துநிற்க இயலாது, இறுதியில் வீழ்ந்து அழிவுறும்; இந்தப் பாரமார்த்திக விதியை - அறம் எங்குளதோ அங்கேயே வெற்றி என்பதை - இக்கதைகளிற் பலவும் நமது மனதிற் பதிய வைக்கின்றன.

இப்படிப்பினையே, இந்துக்களின் ஒவ்வொரு புராணக் கதையும் ஒவ்வொருவீர வரலாறும் பாடும் பல்லவியாகும்; இது இந்துவின் உள்ளத்திற்குள் ஆழத்திற்பதிந்து, அவ்வுள்ளம் வாழ்க்கையை நோக்கும் நிலை முழுவதிற்கும் அவ்வண்ணத்தை ஊட்டியுள்ளது இதனால் இந்துவின் உள்ளம் விலங்கின் சக்தியை நம்புவதினும் அதிகமாக ஆன்மசக்தியில் நம்பிக்கை கொள்ளும்படிப் பயிற்சி பெற்றுள்ளது. வீரனின் வலிமைக்கு அறவாழ்வும் அற ஒழுக்கமும் அரணாக வேண்டும்; அவன் அறத்தை நிலைநாட்டுதற்கெனவே எப்போதும் போர் புரியவேண்டும்; அவ்வாறு இல்லாதபோது, அவனிடம் அசாதாரணமான போர்த்திறமை இருப்பினும், அழிவே அவனுக்குரிய விதியாகும். அரக்கனது வலியும் தீய இச்சைகளும் வாய்ந்த அதிமனிதனை (மனித இயல்பை மிஞ்சியவனை) இராவணனது வீழ்ச்சியைக் கூறும் இராமாயணமும், தண்ணிய ஆசைகட்கு ஆட்பட்டு அவற்றை நிறைவேற்ற நினைத்த கௌரவர்கள் தொகையில் மிகுந்திருந்தும், சிறப்புற்ற தலைமை வாய்ந்திருந்தும் அழிந்தனர் என்பதைக் கூறும் மஹாபாரதமும் இதே படிப்பினையை இந்துக்களின் உள்ளத்தில் நன்கு புகுத்துகின்றன.

இன்னும், இவ் விரு இதிகாசங்களிலும் அவதார புருடரான இராமரும் கிருஷ்ணரும் முறையே எழுந்தருளியிருந்தமை, நிகழ்ச்சிகளனைத்திற்கும் ஒரு பாரமார்த்திக மதிப்பையும் ஊட்டியுள்ளது. ஓர் அவதார புருடரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய தியானம் மிகப்பெரும் பயனைத் தரும் ஞான சாதனமாதலின், இராமாயணமும் பாரதமும் அம்மாதிரியான ஞான சாதனங்களைப் பழக ஏராளமான வசதிகளையும், நல்ல ஊக்கத்தையும் அளிக்கின்றன. இந்தக் கதைகள் வாயிலாக இராமரும் கிருஷ்ணரும் நமது இல்லத்திற்கே வந்துள்ளவரைப்போல் தோன்றுகின்றனர்; இக் கதைகளின் எப்பகுதியையேனும் நாடகமாக நடிப்பதைக் காணும்போதெல்லாம் சிறப்பாக அவர்கள் நமது கண்ணெதிரே நிற்கின்றவராகின்றனர், அவர்களுடைய ஆடைகளின் விளிம்பைத் தொடும் பேற்றை யாம் பெறுகின்றோம். இவை வாயிலாக ஐயமின்றி நமது உள்ளங்கள் இறைவனை நோக்கி உயர்த்தப் படுகின்றன. இக்காரணத்தால் இவை அசாதாரணமான மதிப்புள்ள ஞானத் தூண்டு கோல்களாகின்றன. ஏனையவற்றோடு ஸ்ரீ கிருஷ்ண பகவானது வாழ்க்கை வரலாற்றின் இன்னொரு பகுதியை மனதிற் பதியுமாறு படம் வரைந்து காட்டும் நூலாகிய பாகவதமும் இந்துவின் மனத்தின்கண் அதே மாதிரியான பயனை வளர்க்கின்றது.

புராண கதைகளில் அமைந்துள்ள இன்னொரு மிக இனியதும் போதனையூட்டுவதுமான இயல்பாவது: அவைமூலம், கடமைகள் ஒன்றோடொன்று வெளிப்பார்வைக்கு முரணும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் (தரும) சங்கடத்தைத் தீர்க்க ஆச்சரியமான வழிகளும் காட்டப்படுகின்றன. இராமர் தமது மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையினும் தமது குடிகட்குச் செய்ய வேண்டிய கடமை மிக்க மதிப்புடையதாகின்றது. பரதன் பேராசையும் பொறாமையும் பூண்ட தன் அன்னைக்குச் செய்யவேண்டிய கடமையை அறநெறியைப் பின்பற்றும் அவனது தமையனுக்குரிய கடமை விலக்கி விடுகிறது. விபீஷணன் தனது காம நோயாளனை தமையனுக்குச் செய்தற்குரிய கடமையை அறத்தின்வழிநிற்கும் அவர்களது தெய்வீகப் பகைவர்க்குரிய கடமை நீக்கி விடுகிறது; கர்ணன் தனது மகனுக்குச் செய்யவேண்டிய கடமையைப் பசியொடு தன்னை அணுகிய விருந்தினனுக்குரிய அவனது கடமை வென்றுவிடுகின்றது. நூற்றுக் கணக்கான இவ்வரலாறுகளின் வாயிலாக, சங்கடமான சந்தர்ப்பங்களில் இன்ன கடமையைத் தெரிந்து பற்ற வேண்டும் என்பதற்கு வாழ்க்கையில் வழிகாட்டியாக அமையும்பல உதாரணங்கள் நமக்குத் தரப்படுகின்றன. இச் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும், உடலிச்சையும் குறுகிய சுயநலமும் நம்மிடம் வற்புறுத்திக் கேட்கும் பொருள்களைப் பொருட்படுத்தாது ஞான நெறியை நோக்கி உயரச் செல்லும் உன்னத இலக்ஷியத்தைப் பின்பற்றுமாறு நமக்கு அறிவுறுத்தப்படுகின்றது. கடமைகள் முரண்படுங் காலத்து யாம் பின்பற்றுதற்குரிய நெறி இதுவேயெனத் தோன்றுகிறது.

இந்துக்களின் புராண இலக்கிய நூல்கள் எண்ணிறந்த கதைகள் வாயிலாக முக்கியமான நற்பண்புகளின் படங்களை ஒளிமிக்க வண்ணங்கள் தீட்டி விளக்குவதோடு, கதைப் போக்கைக் குறிக்கும் பகுதிகட்கிடையே தத்துவத்தையும் ஞான சாதனங்களையும் பற்றிய சிறப்பான ஒள்ளிய சம்பாஷணைகளையும் உடையனவாகும். தெள்ளிய நடையிலே நாடகப் பான்மையிலே அமைந்திருப்பது பற்றி இச்சம்பாஷணைகள் இனிமையும், எளிமையும், மனதிற் பதியும் இயல்பும் வாய்ந்துள்ளன. இந்துக்களிற் பெரும்பான்

மையார் மதத்தையும் தத்துவத்தையும் பற்றிய போதனைகளை இவற்றின் மூலம் பெறுதற்குக் காரணம் இதுவே. இங்ஙனைய இந்து சாஸ்திரங்களிற் பலரும் விரும்பிக் கற்கும் நூல்களாகிய கீதையும் சண்டியும்முறையே மஹாபாரதத்தும் மார்க்கண்டேய புராணத்தும் கதைப்போக்கின் இடையே நாடகப் பான்மையிலே கோக்கப்பட்டுள்ள அத்தகைய சம்பாஷணைகளேயாம்.

ஆக, புராணம் வேதங்களிலுள்ள மிக நுண்ணிய போதனைகளையும் கருத்துக்களையும் படம் வரைந்து காட்டுவதாலும், மனதிற் பதியுமாறு ஒழுக்கத்தைச் சித்தரிப்பதினாலும், படிப்பினை மிகுந்த கதைகளையும் ஞானத்தைப் புகட்டும் சம்பாஷணைகளையும் உடைமையாலும், இந்துக்கள் பெறும் வாழ்க்கைக் காட்சியை ஞான மய மாக்குதற்குப் பெருந் துணையாகின்றது.

அத்தியாயம் 21

இந்துக்கள் காணும் வாழ்க்கைக் காட்சி

ஈசன், இயற்கை, ஆன்மா என்னும் மூன்று தத்துவங்களைப் பற்றியும் இந்து சமயம் கூறுவதெல்லாம் ரிக்வேத காலந்தொடங்கிச் சாஸ்திரங்கள் வாயிலாக நமக்கு வந்துள்ளன. அதன் பின், கழிந்த ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் அவற்றைப் பிற்கால சாஸ்திரங்கள் பெருக்கியும் விளக்கியும் வந்துள்ளன; நமது காலம் உள்பட ஒவ்வொரு காலத்தும் தோன்றிய ரிஷிகளின் அனுபூதிகளாலும் அவை மெய்ப்பிக்கப் பட்டுள்ளன. இந்து ரிஷிகள் கண்ட முடிபுகளிலே, வாழ்வையும் இருப்பையும் பற்றிய மாறவொண்ணாத நிலையுற்ற சில உண்மைகள்-இயற்கையில் இறைவனது வியாபகமும் (அந்தர்யாமித்துவமும்), ஆன்மாவின் தெய்வத் தன்மையும், போன்றவை—வெளியாகின்றன. இவை இந்து மதத்தின் அடிப்படையுண்மைகள் எனப்படுகின்றன.

அத்தகைய நித்தியமான உண்மைகளின் மீது தான் (அவற்றை ஆதாரமாகக் கொண்டே) இந்துவின் வாழ்க்கையெனும் முழுக் கட்டிடமும் அமைக்கப்பட்டுள்ளது. ஒருக்கால் இக்காரணத்தினால்தான்போலும் இக்கட்டிடம் பலப்பல நூற்றாண்டுகளாக நிலைத்து வந்துள்ளது. படையெடுப்பும், அன்னிய ஜாதியர் பலரின் குடியேற்றமும், ஆதிக்கமும் கூட இந்துக்களின் வாழ்க்கைப் போக்கை வெளியில் தெரியும் அளவிற்கு ஒரு சிறிதும் மாற்றிவிடவில்லை. அஸ்ஸிரியர், பாபிலோனியர், எகிப்தியர், கிரேக்கர், உரோமானியர் என்பவரைப் போன்று இக்காலத்திய இந்துக்கள் தம் பண்டைக் கால மூதாதையரினின்றும் வேறுபட்டு உருத்தெரியாதபடி மாறிவிடவில்லை. மிகப் பழமையான ரிக்வேதத்திலும் உள்ள மந்திரங்களை இன்றும் அவர்கள் ஓதிவருகின்றனர்; இன்றைக்கும் அவர்களுடைய ஒழுக்கத்தைப் பண்டைய காலத்திற் போன்று சாஸ்திரங்கள் ஒழுங்குபடுத்தி வருகின்றன.

சில தற்கால மனப்பான்மையுள்ள மக்கள் நம்மை நம்பும்படி வேண்டுவது போல, இந்துக்கள் தமது அறியாமையால் இடைக் காலப் போக்கைப் பேதமையோடு விடாது பற்றி வருகின்றனர் என்பதும், இதன் காரணமன்று. காரணத்தைக் கண்டுபிடிக்க வேறிடத்தை நாடல் வேண்டும். என்றைக்கும் அழியாத உண்மையை இந்துக்களால் கைவிட இயலாது என்பதே அக் காரணம். அத்தகைய உண்மைகளாகிய கற்பாறை ஆதாரத்தின் மீது தான் அவர்களது ஜனஸமூகம் கட்டப்பட்டுள்ளது. அம்மாதிரியான ஆதாரத்தினின்றும் வேரோடு பிடுங்கியெடுப்பதாயின் அந்தக் கட்டிடம் நொறுங்கி வீழ்ந்து மறைந்து விடும். ஆனால் அது நடக்கப் போவதில்லை.

நூற்றாண்டுக் கணக்காகக் காலங் கழியவே இந்துக்களின் வாழ்வு எனும் மேற்கட்டிடம் தேய்ந்து பழுதடையலாயிற்று என்பதில் ஐயமில்லை. ஆனால் அது இடிந்து விழு முன்பே, ஓர் அவதார புருடரோ, ஆசாரியரோ தக்க காலத்தில் தோன்றி, அக்காலத்திய மாறிய நிலைமைகட்கு ஏற்றவாறு அதைப் பழுதுபார்த்தும் புதிதாக அமைத்தும், அதற்குப் புதிதான ஆயுளைக் கொடுத்து வந்தனர். இவ்வாறே யுகக் கணக்காக நிகழ்ந்து வரலாயிற்று; அக்காலமெல்லாம் பாரமார்த்திக உண்மைகளென்னும் கற்பாறையை ஆதாரமாகக் கொண்டிருந்த தன்மை மாறாமலே இருந்து வந்தது. சுருதியே (வேதங்களே) மிக உயர்ந்த பிரமாணமெனக் கருதுதல் யுகக் கணக்காக நிலைபெற்று வந்துள்ளது. இருடியராற் கண்டுபிடிக்கப்பட்ட உலவா உண்மைகட்குக் களஞ்சியமான நிலைமையில் அது ஏனைய சாஸ்திரங்கள் அனைத்தையும் தனது ஆட்சிக்குள் அவ்வளவு நீண்ட காலமும் அடக்கி வந்துள்ளது. ஸ்மிருதிகள் என்னும் அந்த ஏனைய சாஸ்திரங்களோ, இந்து ஜன ஸமூகத்தின் மாறுபடும் சூழ் நிலைகட்கு ஏற்றவாறு அப்போதைக்கப்போது பெருமாண்புற்ற ஞானியரால் மாற்றியமைக்கப்பட்டு வந்துள்

என. ஆனாலும் சுருதியில் வெளியிடப்பட்டுள்ள இந்துமத அடிப்படையுண்மைகளினின்றும் விலகாது அவர்கள் அவற்றை மாற்றி வந்தனர்.

இந்துமதம் தோன்றிய நாள் முதலாகவே இம்மாதிரியான மாற்றம் நிகழ்ந்துகொண்டே இருந்துள்ளது. அடிப்படையுண்மைகள் சம்பந்தப்பட்டவரை மாறாத உறுதியும், புறத்தேயுள்ளவற்றை மாற்றியமைப்பதற்கு வேண்டிய வளைந்து கொடுக்குந் தன்மையும்—இவ்விரண்டையும் உபாயமாகக் கொண்டே இந்துக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வெற்றிகரமாக வாழ்ந்து வந்துள்ளனர்.

முற்கூறியபடியே, மனிதனது முக்கிய இயல்பாவது தெய்வத் தன்மையே என்னுங் கொள்கை இந்துமதத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று. மனிதனது ஆன்மா பரம்பொருளிற்கு வேறன்று ஆதலின், எல்லாவிதத்தாலும் தெய்வத்தன்மையை அடையும் சக்தி அவனிடம் எப்போதும் உள்ளடங்கியிருக்கின்றது. அவன் எச்செயலைப் புரியினும், அது எவ்வளவு தண்ணியதாயினும், என்றென்றும் அவன் கெட்டழிந்து போதல் இயலாது. பாவங்களாவன அறியாமையால் இயற்றப்படும் தவறுகளேயன்றி வேறல்ல. அத்தகைய பாவங்கட்காக அவன் இம்மையிலோ மறுமையிலோ துயருழக்க வேண்டியவனாவான் என்பதும் உண்மையே. ஆயினும், அம்மாதிரியான துன்பங்கட்குட்பட்டு வர வர அறிவுமிகுந்து, பல பிறப்பிடை இம்மாதிரி உழன்று, முடிவில் தன்னிடத்து அடங்கியுள்ள தெய்வத் தன்மையை முற்றும் வெளிப்படுத்துகிறான். ஒவ்வொருவரும் இந்த ஞானப்பேற்றை அடைய வேண்டியவரே யாவர். ஆதலால் பாவிகளைக் கதியற்றவரெனல் பொருந்தாது. அவர்கள் மீது அனுதாபங்காட்டி, அறியாமையினின்றும் அவர்களைக் கரையேற்ற உதவி புரிதல் வேண்டும்.

உண்மையாதெனில், மனிதன் அகண்ட பரம்பொருளோடு, தான் ஒன்றாவதை உணராது, தனது தூல உடலிலும் தூல உலகிலும் பற்றுள்ளவனாயிருக்கும் வரை, அவன் பந்த நிலையில் இருந்து கொண்டேயிருப்பான். அவன் மனித வடிவத்திற் கிட்டத்தட்ட ஒரு விலங்காவான். ஆயினும் இந்துமதம் அவனை என்றென்றும் நாசமடைந்தவனாவான் என்பதில்லை. அவனை அது படிப்படியாக மேலேற்றிவந்து, அவனிடத்துள்ள விலங்குத் தன்மை முற்றும் மறைந்து, அதற்குப் பதிலாகத் தெய்வத்தன்மை திகழும்வரை உதவுகின்றது.

இச் சீர்சான்ற மாற்றத்தை விரைவில் நிகழுமாறு செய்வதே இந்துமதத்தின்படி மனித வாழ்க்கையின் நோக்கமாகும். ஏனைய ஒவ்வொன்றும் இந்த முடிவை யடைதற்கு ஓர் உபாயமாகவே கருதப்படுகின்றது. புலமையும் செல்வமும் மக்கட்பேறும், ஞான வாழ்க்கையில் முன்னேறுவதற்குத் துணை செய்யும் வகையில், முக்கியமாகாத மதிப்புடையவையே யாம். அவை முக்கியமான நோக்கத்தை நிறைவேற்ற உதவாதனவாயின், அற்பமேயாம். ஞானவாழ்க்கையை இடர்ப்படுத்தும் எதுவும் பூரண நிலையை நோக்கி ஒருவன் முன்னேறுவதைத் தடை செய்தற்கே ஏதுவாம்.

ஆயினும், மனிதன் உடற்பற்றுக்கு வசமாகி, ஐம்புலன்களால் அறியப்படும் பொருள்களில் நாட்டமுள்ளவனாகும் வரை, வாழ்க்கையில் நிகழ்ச்சிகள் மாறும்போதெல்லாம் அடிபட்டுத் திக்கற்றுத் திகைக்கும் ஓர் அற்பமான எளிய பிராணியாவான். அவன் தனது உண்மையான வடிவமான ஆத்மாவின் பெருமையை உணராதவன். அதன் நிழலையே தனது ஆன்மாவாக மயங்கித் தழுவுபவன். மனிதன் தன்னைத் தூல உடலோடும் இந்திரியங்களோடும் ஒன்றுபடுத்திக் கொண்டு, இந்நிலையில் ஆசைகட்கு அடிமை பூண்டவனாகத் தோன்றுகிறான். சினம், பகைமை, காமம், அகந்தை என்பவற்றுக்கும், அனைத்திற்கும் மேலாகச் சுயநயலனுக்கும் ஆட்பட்டவனாகி, அவன் தனது உண்மையான இயல்பைப் பாழ்படுத்திக் காட்டுகிறான். அவனது தெய்விக ஆன்மாவை அவனது கலங்கிய மனது மறைத்துவிடுகிறது. தான் என்று அவன் உரிமை பாராட்டும் பொருள் அவனது உண்மையான ஆன்ம இயல்பின் பண்படாத குறுகிய தாழ்ந்த நிலைகுலைந்த பிரதிபிம்பமேயாம்.

இதுதான் மனிதனது வெளித் தோற்றமாயுள்ள தாழ்ந்த அகங்கார இயல்பு; இதுவே ஆசைகள் செறியும் நிலையில் அவனைக் கட்டுறுத்தி வைத்து, இம்மையிலும் மறுமையிலும் தொடர்ந்துவரும் பல பிறப்புக்கள் வழியாகச் சுழலச் செய்கிறது. இதுவே மரத்தின் மீதே சுவையுள்ள பழங்களை அயின்றுவரும் பறவையாகும்; இதுவே இருளென வருணிக்கப்பட்டுள்ள பொருளாகும். [அத்தியாயம் 19-ஐப் பார்க்கவும்.]

எனினும், தக்க ஞானசாதனப் பயிற்சியால் இப்பொய்த்தோற்றமாயுள்ள தாழ்ந்த அகங்காரம் நாளடைவில் மறைகிறது, மனிதனை ஐம்பொறிகளால் அறியப்படும் பொருள்களும் புலன்களும் விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டுள்ள பிடிப்பினின்றும் விடுவித்து, உள்ளே உலவாத சாந்தி குடிகொண்டிருக்கும் பிரதேசத்தில் அவனைப் பிரதிஷ்டை செய்கிறது.

ஞான சாதனத்தின் ஸாரமாவது, இந்தத் தாழ்ந்த இயல்பாகிய அகங்காரத்தை-அறியாமையின் அரணாகிய இதனை—தகர்த்தெறிந்து, இல்லாதொழிப்பதே யாகும். யாண்டும் மாறியும் புத்துருவங் கொண்டும் எழும் ஆசைகள் வடிவமான அதன் தேவைகளைக் கடிதலாலே (விலக்குவதாலே) அக்காரியத்தை இயற்றல் வேண்டும். ஆதலால் ஆசைகளை விடுத்தலே (அவாவறுத்தலே) ஞானசாதனத்தின் அடிப்படைத் தேவையாகும். அதுவே ஞானவாழ்விற்கு மூச்சாவது. அதன் வாயிலாக மட்டுமே அமர நிலையினை எய்தலாகும், மனிதனிடத்து அமர்ந்துள்ள தெய்வத்தன்மையை வெளிப்படுத்தக் கூடும், வேறுவழி யாதொன்றும் இல்லை. முழுத்துறவே இலக்ஷியம்; அதன் மூலமே மனிதன் இறைவனும் தானும் ஒன்றாவதை அறியமுடியும். இதை ஒரே நாளில் இயற்ற வொண்ணாதென்பதும், அனைவரும் ஒரே காலத்தில் இயற்றவொண்ணாது என்பதும் உண்மையே. இதுவே இலக்ஷியம் என்பதில் ஐயமில்லை; ஆனால் இதனை, ஒவ்வொருவனும் தான் நிற்கும் இடத்தினின்றே தொடங்கிப் படிப்படியாக அடைதல் வேண்டும். இந்திரியங்களையும் மனதையும் படிப்படியாகவே அடக்கி வர வேண்டும். இக்காரணம்பற்றியே பிரவர்த்தி மார்க்கம் ஆசைகளைப் பின்பற்றும் முறையையும் ஓர் எல்லைக்குள் அனுமதிக்கின்றது.

ஆனாலும், பூரண நிலையெனும் குறிக்கோளை (முடிவை), ஆசைகளை அறவே துறத்தல் என்னும் வழியொன்றால்தான் அடையலாகும். உள்ளேயிருக்கும் தெய்விக ஆன்மா முற்றும் தன்னை வெளிப்படுத்தும் போது, ஒருவன் தனக்கு அகத்தும் புறத்தும் உள்ள இயற்கையைப் பூரணமாக அடக்கல் வேண்டும். இவ்வடக்கம் மன அடக்கத்தாலோ (இராஜயோகம்), தத்துவ விசாரணையாலோ (ஞானயோகம்), வழிபாட்டினாலோ (பக்தியோகம்), கருமத்தாலோ (கருமயோகம்), இவற்றில் ஒன்றுக்கு மேற்பட்டவற்றை ஒன்றாயிணைத்தோ பெறலாகும். இதுவே உண்மையாக மதத்தின் முழுமையும். இந்து தருமம், அதன் கோயில்கள் பிரதிமைகள் கிரியைகள் புராண கதைகள் என்பவற்றோடும் ஞானக் கருத்துக்களில் உள்ள பலவகை வண்ணங்களோடும் தவறாது சுட்டிக் காட்டிக் கொண்டிருப்பது இதனையே என்க.

ஆக, இந்துக்கட்கு மதம் என்பது பேரளவிற்கு அனுபவ சம்பந்தமுற்ற ஒரு காரியமேயாம். அது அவனது வாழ்வு முழுவதையும் அடக்கியாள வேண்டும் என்பதே கருத்து. அது மனிதனது வாழ்வையும் ஒழுக்கத்தையும் ஒழுங்குபடுத்திவந்து, அவன் புறப்படும் இடத்திலிருந்து தெய்வத்தன்மையை நோக்கி இயன்றவரை முன்செல்லும் திறமையை அளிக்க வேண்டும். மதத்தை அனுபவத்திற்குக் கொண்டு வருவதற்காக ஏற்பட்ட பயிற்சித் திட்டங்கள் இக்காரணத்தால் அவனுக்கு இயல்பாயுள்ள தேவைகட்கு ஏற்றனவாய், அவனது ஞான முதிர்ச்சிக்குரிய நிலையினைச் சார்ந்தனவாய் அமைதல் கட்டாயம் ஆகும். இவை அவனது ருசிக்கும் திறமைக்கும் இயல்பிற்கும் ஒத்தவாறு இருத்தல் வேண்டும். ஒவ்வொருவனும் தனக்கு மிக நன்றாகப் பொருந்தும் திட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். இதுவே 'அதிகாரி வாதம்'—'அவனவனுக்கு அவனவனது திறமைக்கு ஏற்றவாறு'— என்னும் கொள்கை.

இது சம்பந்தமாக இந்து சாஸ்திரங்கள் பலரறியக் கூறும் இன்னொரு முக்கிய உண்மையாவது: ஒரு பிறவியில் அடையும் ஞான முன்னேற்றம் நஷ்டமாவதில்லை யென்பது. ஒரு மனிதன் ஒரு பிறவியின் முடிவில் அடையும் நிலை மறுபிறவியின் ஆரம்பநிலையாகின்றது. முன்னரே அடைந்த ஒன்றை எதுவும் அழிக்க வொண்ணாது. தீய செயல்கள் துயரங்களை உண்டாக்கி, அவ்வாறு போக்கப் படுகின்றன; மேலும் சிறிது நேரம் அவை ஒருவனது பார்வையை மறைத்து, ஞான முன்னேற்றத்திற்குரிய தூண்டுதலை அடக்கிவைக்கும்; ஆனாலும் ஞானசாதனத்தால் எய்தப்பெற்ற ஒன்றை அவை நிலையாக அழிக்கமுடியாதன. நன்மையும் தீமையும் இந்துமதப்படி ஒன்றையொன்று எதிர்த்து அழிப்பனவல்ல; ஒவ்வொன்றும் தனித்தனியே அததற்குரிய பலன்களைக் கொடுக்கும். ஆன்ம ஞானம் உதித்தபின் ஒருவன் அவ்விரண்டையும் தாண்டி அப்பாற் செல்கிறான்.

இயற்கையில் ஈசன் ஊடுருவியிருக்கும் தன்மை இந்துமதத்தினைச் சார்ந்த உட்பிரிவினர் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படும்

இன்னொரு முக்கியமான பாரமார்த்திக உண்மையாகும். இயற்கையின் மேற்புறத்திலே காணப்படும் பலவகைப்பட்ட மாற்றங்கட்கு அடியிலே ஒருமை கடவுள் வடிவமாயுள்ளது. முத்துமாலையொன்றில் உள்ள முத்துக்களுக்கு ஊடே செல்லும் கயிறு போல அவர் எல்லாப் பொருள்கட்கும் ஊடே செல்கிறார். ஈசனே இயற்கையில் உள்ள எண்ணற்ற ஒழிவற்ற பொருள்களாகத் தம்மை வெளிப்படுத்துகிறார்; அவற்றையெல்லாம் 'அந்தர்யாமி' வடிவிலே உண்ணின்று அடக்கியாண்டு வருதலால் அவர் இயற்கையிலுள்ள இணையற்ற கூட்டிசைவை உண்டாக்கி வருகின்றார்.

பலவற்றுள் ஒருமையே இயற்கையின் அடிப்படை விதியென இந்துக்களால் கருதப்படுகின்றது. இயற்கையிலுள்ள கூட்டிசைவை உண்டாக்கப் பலவாந்தன்மை ஒருமையெனும் இரு பகுதிகளின் அவசியத்தையும் தனித்தனித் தொழிலையும் மதிக்க அவர்கள் கற்றுக் கொள்கின்றனர். பலவாந்தன்மை காரணமின்றித் தற்செயலாக நிகழ்ந்ததொன்றன்று. அதற்கு ஒரு கருத்தும் மதிப்பும் உண்டு. ஈசன் தன்னை வெளிப்படுத்துதற்காகக் கொள்ளும் நாட்டத்தினின்றும் அது உதிக்கின்றது. "ஒன்றாயுள்ள நான் பலவாகட்டும்" என்னும் ஈசனது எல்லாம் வல்ல சங்கற்பமே எண்ணிறந்த பலவகையான தோற்றங்களை உண்டாக்குவதன் மூலம் நிறைவேறுகின்றது. ஈசனது பிரகிருதி (அண்டத்திலுள்ள சக்தி) ஓய்வின்றிப் புதுப் புது வடிவங்களைத் தோற்றுவிக்கும் சக்தியை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. இக்காரணம் பற்றியே இயற்கையில் பலவாந்தன்மையெனும் முத்திரை பொறிக்கப்பட்டுள்ளது. ஒரே மரத்திலும் எந்த இரண்டு இலைகளும் எல்லாவிதத்திலும் ஒன்று போலிருப்பதல்லை.

உண்மையுரைக்கின், வெளிப்புறத்துள்ள வேற்றுமையை அகததேயுள்ள ஈசனது ஒருமை சிருட்டித்தும் அடக்கியாண்டும் வருவதனாலன்றோ இயற்கையிலே அழகும் ஒழுங்கும் கூட்டிசையின் நலமும் குலவுகின்றன. அகத்தேயுள்ள ஒற்றுமையை உணர்வோரே வெறெவரையும்விட அதிகமாக இந்த அழகை அனுபவிப்பார். அத்தகையாரது நெஞ்சத்தினின்றுந்தான் அனைத்துயிர்மீதும் ஒக்கப்பாயும் அன்பும், அமைதியும் தூய்மையும் ஆர்ந்த ஆனந்தமும் பெருகி வழிந்து, உலக முழுதும் பரவி, அதனைப் பரலோகமாக மாற்றிவிடும்.

(தொடரும்)

உள்ளமே உரைகல் செயலன்று

டி. ஆர். ராமநாத சாஸ்திரி. B. O. L.

[கல்யாணிலிருந்து மொழிபெயர்த்தது.]

(1)

முகுந்தன் பெரிய கொள்ளைக்காரன். அச்சத்தை விளைவிப்பதில் யமனோ, கரு நாகமோ, பதினாறு அடி வேங்கையோ முகுந்தனுடன் போட்டிபோட முடியாது. வழிபறிக் கொள்ளை, பகற் கொள்ளை, கல்நெஞ்சக் கொள்ளை, ஏன்! கொலைக் கொள்ளை, இவையே முகுந்தனுடைய தினச் செயல்கள். தற்செயலாய் ஏற்பட்டவற்றையும், தற்காப்பிற்காகச் செய்தவற்றையும் விலக்கிக் கல்நெஞ்சத்தினரையும் நடுங்கச் செய்யும் எழுபது கொலைகளைச் செய்த உத்தம வீரன் முகுந்தன். கொலைகளென்றால், பறவைகளினுடையவோ, விலங்குகளினுடையவோ, என்று ஐயமுற வேண்டாம். வழி யாத்திரை செய்த சீமான்களின் கொலைகள்; அவர்கள் தம்மிடம் உள்ள எல்லாவற்றையும் கொடுத்த பிறகும் கொழுப்பினால் செய்த கொலைகள்—'உயிர்தப்பி ஓடுகிறோம். மன்னித்து விட்டுவிடு' என்று பணிந்து, கெஞ்சிக் கேட்கையிலேயே கழுத்துக்களில் கத்திகளைப் பாய்ச்சிச் செய்த கொலைகள்; உற்றாரும் நண்பரும், பெண்டிரும் சேய்களும் கதறக் கதறச் செய்த கொலைகள். செல்வம் குவிந்தது. மனம் மட்டும் நிம்மதியை இழந்து துடித்தது.

எந்த முற்பிறவியிற் செய்த நற்பயனின் வினையோ, முகுந்தனை ஆராய்ச்சித் துறையில் இறக்கிற்று. அவன் செய்த செயல்களின் தோற்றங்கள் உள்ளமாகிய திரைப்படத்தில் இடைவிடாது மாறி மாறிக் காட்சியளித்தன. இவனுடைய வாளிற்கிரையானவர்கள் புன்னகையுடன் 'இப்பொழுது கொல்லடா, பார்ப்போம்' என்று அழைக்கும் முறையில்

தோற்றமளிக்கலாயினர். தான் செய்த செயல்களை எண்ண எண்ண முகுந்தன் நாணினான். தன்னையே வெறுத்துக் கொள்ளத் தொடங்கினான். தன் உள்ளம் ஏன் இச்செயல்களில் ஈடுபட்டது என்று அவனுக்குப்புலப்படவே இல்லை. இந்த நல்லறிவு ஏன் முன்பே தன்னுள்ளத்தில் தோன்றவில்லையென்று அவன் வருந்தினான். 'இந்த நிலைமையிலேயே, அமைதியை இழந்து எவ்வளவு நாட்கள் வாழ்வது?' என்று வாழ்க்கையையே வெறுத்துக் கொண்டான்.

முடிவில் எவ்விதமாயாவது இத் தீய செயல்களின் பயன் தன்னை யணுகாது தப்பித்துக் கொள்ள வேண்டும் என்று உறுதி கொண்டான். பலவிடங்களுக்குச் சென்றான். தற்செயலாய் ஒரு சாதுவைக் கண்டான். அவரடிகளை நன்கு பிடித்துக் கொண்டான். தன் இழி செயல்களை உள்ளபடி விவரித்தான். அப்பாபச் செயல்களினின்றும் தப்பி நற்கதி பெறும் வழியைத் தனக்குக் கூறியருள்புரியுமாறு வேண்டினான்.

'அன்பா! குற்றமற்ற, சரணமடைந்த, கதியற்ற, 70 பேரைக் கொன்ற பாபம் மிகக் கொடியதே. அதன் பயனை நீ பெற்றே யாக வேண்டும்' என்றார் சாது.

'ஸ்வாமீ, முடியாது; நான் இவ்விடத்தை விட்டு நகரமாட்டேன். ஏதாவது ஒரு வழியைக் கூறுங்கள். அது எவ்வளவு கடினமாயினும் சரி. கூசாமற் கூறுக. நான் அதைப் பின்பற்றுவேன். விடுதலை பெறுவேன்' என்றான் முகுந்தன்.

சாது பார்த்தார். முகுந்தன் முரட்டுப் பேர்வழி. அவனிடமிருந்து தப்பியாக வேண்டும். சிறிது ஆராய்ந்தார் ஓர் கருந் துணியை ஓர் தடியில் சுற்றிப் பறக்க விட்டார். அதை முகுந்தனின் கைகளிற் கொடுத்தார். 'அன்பா! நீ இதைக் கையில் பிடித்துக் கொண்டு பலவிடங்களுக்கும் செல். அங்கங்குள்ள தூய நீர்களில் நீ மூழ்கிவிட்டுப் பிறகு இந்தக் கொடியையும் அவற்றில் மூழ்கச் செய். இந்தக் கருப்புத் துணி எந்த நேரத்தில் வெண்மை நிறத்தைப் பெறுகிறதோ, அந்த நேரம் முதல் நீயும் உன் பாபங்களிலிருந்து விடுபட்டதாக உறுதி கொள் என்று கூறி அனுமதியளித்து அனுப்பினர்.

(2)

குருதேவரின் உபதேசத்தை முழு நம்பிக்கையுடன் பின்பற்றினான் முகுந்தன். பல தூய ஆறுகளிலும், குளங்களிலும், கடல்களிலும், பல தேவாலயக்கிணறுகளிலும் நீராடினான். கொடியையும் மூழ்கச் செய்தான். கொடித் துணியின் நிறம் சிறிதளவு கூட மாறாதிருப்பதையறிந்தான். அவனது உள்ளம் துடித்தது. தூய நீர்களில் மூழ்கியமையினால் தன் தீய வினை முற்றிலும் அழியாவிடினும் குறைந்திருக்கவாவது வேண்டும் என்றும், அதற்கு அறிகுறியாகக் கருங்கொடி யாடையின் நிறம் சிறிது மாறியிருக்க வேண்டும் என்பதும் முகுந்தனுடைய கோரிக்கை. அது பலியாது போகவே முகுந்தனின் ஊக்கம் மறைந்தொழிந்தது. ஆ! ஓர் கொலையின் பாபத்தை நீக்கவே எவ்வளவோ பிறவிகளெடுத்துத் தவம் செய்ய வேண்டும். எழுபது கொலைகளின் தீவினைகளை ஒரே பிறவியில் நீக்க முயலும் என் மடமையை என்னென்று சொல்வேன்? இதை அறிவிப்பதற்காகவே என் குருநாதர் இக் கருங் கொடியை அளித்தார் போலும். இனியும் இந்த வாழ்க்கையை நான் நடத்துவது அறிவிலியின் செயலாகும். உடனே தற்கொலை செய்து கொண்டு, இந்தப் பாப மூட்டையாகிய உடலை அழித்து விடுகிறேன். ஆனால் அதற்கு முன்பு இந்தக் கருங் கொடியை குருநாதரிடம் திருப்பிக் கொடுத்து விடுகிறேன். அவருடைய அனுமதியையும் பெறுகிறேன்' என்று மனதில் உறுதி கொண்டு, சாதுவின் இருப்பிடத்தை நோக்கி விரைந்து சென்றான் முகுந்தன்!

(3)

எங்கிருந்தோ அழுகைக் குரல் முகுந்தனின் செவிகளிற் பாய்ந்தது. அஃது ஓர் அபலையின் குரலெனப் பட்டது. முகுந்தன் அக்குரல் தோன்றுமிடத்தை நோக்கி வேகமாக ஓடினான். கொடிய தோற்றம் பெற்ற பத்துத் தீயோர்களின் இடையில் ஓர் அழகிய மங்கை கதியற்றுக் கதறுவதைக் கண்டான். பல செம்படவர்களால் கரையில் எடுத்து எறியப்பட்டுத், தண்ணீரில் பாய முடியாது தடை செய்யப்பட்டுத் திணறுகின்ற மீனைப் போலவும், கசாப்புக் கடைக்காரர்களின் கைகளிலிருந்து தப்பியோடப் பலவழிகளையும் ஆராய்ந்து, ஏதுமறியாது கலங்கும் பசுவைப் போலவும், எந்த மூலைகளில் ஓடினாலும் ஆயுதமேந்திய வேடர்களால் திரும்புமாறு செய்யப்பட்டு அறிவு மயங்கும் பெண்மானைப் போலவும், எல்லா உபாயங்களையும் செய்து, எதிலும் வெற்றி பெறாது தோல்வியுற்று, வாடி வதங்கி, ஓடியாடி, கதியற்றுக், கதறியழுது, திகைத்து,

எங்கிருந்தாவது உதவிவராதா என எதிர் பார்த்து, ஏதும் கிடைக்காமற் போகவே, 'கடவுளே கதி' என முயற்சியற்று சிலைப் பதுமையைப் போல நின்று கொண்டிருந்த மங்கையைக் கண்டான்.

மங்கையின் பிறப்புரிமையான, அணியான, கற்பை அழிக்க அக் கயவர்கள் முயலுகின்றனர் என்பதை எளிதில் அறிந்து கொண்ட முகுந்தனின் உள்ளம் உருகிற்று. தூய நீர்களில் மூழ்கித், தன் தீய செயல்கட்காக வருந்திக் கொண்டிருந்த அவனது மனத்தில் உயர்ந்தோரின் குணமாகிய தயவு பெருகலாயிற்று. அம் மங்கையின் துன்பத்தைத் தன்னுடையதாகவே அவன் கருதினான்.

பல்லாண்டுகளாக அவன் இடுப்பை அழகுபடுத்திவந்த வாள் இன்னமும் அங்கு செருகிய வண்ணமே இருந்தது. ஏனோ அவன் அதை எறியாது வைத்துக் கொண்டேயிருந்தான். முகுந்தனின் கை அவ்வாளை உருவிற்று.

'எவ்வளவு நீர்களில் மூழ்கியும் என் தீவினைப்பயன் நீங்கவில்லை. இனியா அது தொலையப் போகிறது? ஒருக்காலும் இல்லை. எழுபது கொலைகளின் வினைப்பயனைத் தாங்கிய எனக்கு இன்னம் பத்து கொலைகளின் பாபச் சுமையைத் தாங்கும் வலிமை இல்லாமல் போய்விடுமா? இவர்களை ஒழித்து இப் பேதையின் இன்னலை அகற்றுவேன். இல்லாவிடில் இப்போரில் என் உயிரை மாய்த்துக் கொள்வேன். தற்கொலைப் பாவமாவது இல்லாது போகட்டும். வீரனாய் வாழ்ந்த நான் வீரனாகவே சாவேன்' என்று இமைப் பொழுதில் தீர்மானித்துக் கொண்ட முகுந்தன், உயிருக்குத் துணிந்து அக் கூட்டத்தினரிடையிற் பாய்ந்தான். காமப் பேய்க்கு அடிமையாயிருந்த அத் தீயவர் மங்கையிடம் எவ்விதமான எதிர்ப்பையும் எதிர்பார்க்காமல் இருந்தமையினால் ஆயுதங்களைக் கைகளில் ஏந்தாது அங்குக் கூடியிருந்தனர். ஆதலால் மின்னலின் விசையோடு அப்பதின்மரின் சிரங்களையும் சடலங்களினின்றும் வீழ்த்தினான். மங்கையின் வாழ்த்து மொழிகளைப் பெற்று அவளுக்கு ஆறுதல் உரைத்துவிட்டுக் கொடியின் பக்கம் திரும்பிய அவனுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு எல்லையே இல்லை. அக்கருந் துணி தூய வெண்மை நிறத்தைப் பெற்றிருந்தது. என்ன செய்வான்? பித்தனைப் போல் குதித்தான், ஆடினான். கண்களினின்றும் நீரைப் பெருக்கினான். விரைவில் அப் பெண்ணை அவள் இருப்பிடத்திற் சேர்த்துவிட்டுக் குருதேவரிடம் ஓடினான். அடிகளில் விழுந்தான்.

(4)

வெண் கொடியைக் கையில் தாங்கிய வண்ணம் எதிரில் நின்ற சீடனைக் கண்டதும் சாது சிறிது திகைத்து நின்றார். விளையாட்டிற்காகத்தாம் அளித்த அக் கருங் கொடி வெண்மையானதை அவருக்கு நம்ப முடியவேயில்லை. உண்மை அன்பினாலும், உணர்ச்சிப் பெருக்காலும், நன்றி மேலீட்டினாலும் நீரைப் பெருக்கி நின்ற முகுந்தனை ஆசிமொழிகளால் வாழ்த்திவிட்டு 'அன்பா! எந்தத் தூய நீரில் இந்தக் கொடியாடையின் நிறம் மாறுதலைப் பெற்றது?' என்று வினவினார்.

'வாள் தீர்த்தத்தில் நீராடுகையில்' என்றான் முகுந்தன் கூப்பிய கரங்களுடன்.

'வாள் தீர்த்தம் எங்கப்பா உளது? அதை நான் கேள்விப் பட்டதேயில்லையே? செய்திகளை விவரமாகக் கூறு' என்றார் சாது,

'பெரியோரே! எல்லாத் தீர்த்தங்களிலும் நீராடி முடித்தேன். பயனேதும் கிட்டவில்லை. வாழ்வில் வெறுப்புடன் தம்மிடம் தெரிவித்துத் தற்கொலை புரிந்து கொள்வதற்காகத் திரும்பிக் கொண்டிருந்தேன். பாதையில் ஓர் மங்கையின் கற்பை அழிக்க முற்பட்ட பத்து பிசாசர்களை வாளினால் கொன்றேன். எதிர்பாராத வகையில் கொடி வெண்ணிறத்தைப் பெற்றது. எழுபது கொலைகளின் தீவினையுடன் மேலும் பதின்மரைக் கொல்வதனால் பாபச் சுமை அதிகமாவதற்கு மாறாக எவ்விதம் குறைந்தது என்று அறிந்து கொள்வதற்காக இங்கு ஓடோடி வந்தேன். விளக்கியருள் புரிக' என்று வேண்டினான் முகுந்தன்.

புன் முறுவல் பூத்த முகத்துடன் சாது கூறினார்: 'அன்பா' ஓர் உண்மையை நீ இன்று தெரிந்து கொள்வாய்; எந்தச் செயலும் செயலளவில் நன்மையை அளிக்கக் கூடியதாகவோ, தீமையை அளிக்கக்கூடியதாகவோ ஆகிவிடாது. நற் செயல் தீமை தருவதாகவும், தீய செயல் நலமளிப்பதாகவும் சில நேரங்களில் ஆகலாம். அச் செயல்களைப் புரியும் நேரங்களில் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்கள்தான் அங்ஙனம் மாற்றும் ஆற்றலைப் பெறுகின்றன.

நீ முதலிற் செய்த எழுபது கொலைகளும் உன் சுயநலத்தைக் கருதிச் செய்தவை. உன்

உள்ளம் அப்பொழுதெல்லாம் தீய எண்ணங்களைப் பெற்றிருந்தது. முடிவிற் செய்த பத்துக் கொலைகளும் ஓர் பெண்மணியின் சிறந்த அணியான கற்பைப் பாதுகாப்பதற்காகச் செய்தவை. அந்நேரத்தில் உன் உள்ளம் பிறர் நலனைமட்டும் கருதிற்று. உன் உள்ளத்தில் தயவு பெருக் கெடுத்து ஓடிற்று. ஆதலால் இந்தப் பத்துக் கொலைகள் உனக்குப் பாபத்தையளிக்காது போயின. அது மட்டுமா? முந்திய கொலைகளின் பாபச் சுமையையும் உன் தோள்களினின்றும் வீழ்த்தி விட்டன.

உள்ளத்தால் நன்மை தீமைகளேயன்றிச் செயல்களாலன்று எனத் தெரிந்துகொள்' என்று கூறிமுடித்தார் சாது.

வால்மீகி ஹிருதயம்

(இந்த வியாசம் சிருங்ககிரி மடம் பிரம்ம ஸ்ரீ நரசிம்ம பாரதி யதிந்திரர் அவர்களுடைய உபந்யாசத்தின் முக்கிய ஸாரம்)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்திற்குத் தர்மம், சத்யம் இரண்டும்தான் அடிப்படையான தாத்பர்யம். நாம் தம்முடைய தர்மத்தைச் சட்டமுறைப் படிக்கும், பெரியோர்களின் ஆசாரப்படிக்கும் அவசியம் அனுஷ்டிக்க வேண்டும். தர்மம் என்பது பெரியோர்களால் அந்த அந்த அபூர்வ சந்தர்ப்பங்களில் சுருதி, யுக்தி. அனுபவம் இவைகளை, நன்ருக உணர்ந்து அவைகளில் கூறி இருக்கும் விதிப்படி நீதியும் ஒழுங்கும் தவருமல் அனுஷ்டிப்பதுதான். சத்யமோ என்ருல் வாக்கினுல் உண்மை பேசுவது. இதைக் காட்டிலும் உயர்ந்த சத்யம் என்னவென்ருல் வாக்கு, மனது, காயம் என்கிற திரிகாண சுத்தியாய் உண்மையையே தன்னுடைய ஆசாரத்தில் அமைத்து, தினம் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவது. நன்ருக சாஸ்திரங்களை ஆராய்ந்து பார்த்தால், உபநிஷத்துக்களில் உள்ள தத்துவம் இரண்டு-சத்யம்வத, தர்மம் சர 'உண்மை பேசு' 'தருமப்படி நடந்து கொள்'—இதுவே உயர்ந்த நிலைமை. சூக்ஷ்மமான தர்மம்தான் சத்யம். சூக்ஷ்மமான சத்யம்தான் தர்மம்.

வால்மீகியின் ஹிருதயத்தை அறிவதற்கு இந்த தர்மம் சத்யம் இரண்டுந்தான் உயிர் நாடி. இதிலிருந்து ஏராளமாக இதர அவாந்தரமான தர்மமும் பலன்களும் உற்பத்தி ஆகி, சரீரம் பூராவும் வியாபித்து ஒரு மனிதனின் அந்தக் காரணத்தைச் (மனதை) சுத்தி செய்கின்றன. சுருதி, ஸ்மிருதி, சதாசாரம் (மகான்களுடைய அனுஷ்டானத்திற்கு அந்த அந்த சந்தர்ப்பங்களில் தோன்றக் கூடிய மனதிற்கு வந்த விதியும் ஆசாரமாம்) இவையே தர்மத்திற்கு முக்கியமான ஆதாரங்கள். ராமோ விக்ரஹவான் தர்ம; 'ராமஸ்ஸத்ய பராக்ரம:' —'ராமன் உருவில்லாத (அமூர்த்தமான) வைதிக லௌகிக சட்டத்தின் பிரத்யக்ஷ ரூபமான ஒரு அவதார வடிவம்; 'ராமனுக்கு சத்யமே வலிமை'. தம் தர்மத்தையும் காப்பாற்றிக் கொண்டு தம்மைச் சேர்ந்தவர்களின் தர்மத்தையும் காப்பாற்றுகிருர். தர்மத்தை நிலை நிறுத்தத்தான் ராமாவதாரம் என்பது பிரசித்தம். ஆனுல் ஸ்ரீமத் வால்மீகியின் ராமாயணத்தின் ஹிருதயத்தை ஸ்ரீமத் பாகவதத்தில் சூத்திர ரூபமாக எடுத்து நன்கு விளக்கி இருக்கிருர். ஒரே சுலோகத்தில் பின் வருமாறு உரைக்கிருர்; "பிதாவுக்காக ராஜ்யத்தை தியாகம் செய்து காடு சென்று, தனது தர்ம பத்னியான சீதையினுடைய கால்களினுல் மத்ய மார்க்கத்திலுள்ள முட்களை விலக்கிக்கொண்டு, சுக்ரீவன் அனுமன் இவர்களை அனுக்கிரஹம் செய்து, சூர்ப்பனகையை விரூபணம் செய்து, தன்னுடைய மனைவி சீதாபிராட்டியாரைத்தான் விட்டுப் பிரிந்ததால் ஏற்பட்ட கோபம் என்கிற அம்பால் நாண் பூட்டி, சத்துருக்களை ஜெயித்து, புருவத்தை நெரித்து, அதனுல் சமுத்திர ராஜனைப் பயமுறுத்தி, சேது என்கிற அணைகட்டித்துஷ்டர்கள் என்கிற வனத்திற்குக் காட்டுத்தீப்போல் பிரகாசித்து, கோசல நாட்டிற்கு இந்திரனுய் விளங்கிய ஸ்ரீ ராமபிரான் நம் அனைவரையும் ரக்ஷிக்கட்டும்". பட்டாபிஷேகம் செய்யும் தருணத்தில் ராஜ்யத்தை இழக்க நேரிடுகிறது. ஆனுல் ராமனுடைய சித்தத்தில் மாறுதல் இல்லை, எப்பொழுதும் போல் முகம் மலர்ந்து இருக்கிறது. உலகத்திற்கு அவன் இறைவன், அதனுல்தான் காம்பீர்யன் என்று சொல்லப்படுகிறது. தான் மட்டிலும் அல்லாமல் தன் மனைவியான சீதையும் வனத்திற்குத் தான் வருவேன் என்று நிர்ப்பந்தித்து, இருவர்களும் மரவுரி கிருஷ்ணஜினம் பூண்டு, ராஜ்யத்தை விட்டு அகலுகிருர்கள். கைகேயியின் இரண்டு வரங்

களினால் 14 வருடம் வனவாசமும் பரதனுக்குப் பட்டாபிஷேகமும் கட்டாயப்படுத்தப்பட்டதும், தசரதர் மூர்ச்சை அடைகிறார். அரண்மனையில் கௌசல்யை முதலானவர்கள் ஆராத மனக்கலக்கத்தை அடைகிறார்கள். அந்த வரப்படி நடக்காமல் ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்து கொள்ளும்படி லக்ஷ்மணர் போதிக்கிறார்; இருந்தும் ஸ்திரீயினால் அபகரிக்கப்பட்ட மனதுடன் தசரதன் கொடுத்த வரத்தை நிறைவேற்ற ராமனுக்கு முறையில்லை. சத்யமே முக்கியமான தர்மம் என்ற சாஸ்திரத்தின் உண்மையை உணர்ந்து பிதாவின் வார்த்தையைப் பரிபாலனம் செய்வது தமது ஒரே கடமை என்ற கடமை உணர்ச்சியினால் ராஜ்ய ஸ்ரீயைவிட்டு விடுகிறார். ஸ்ரீ சுகஸ்வாமி பின்வருமாறு கூறுகிறார்; 'சத்யம் என்கிற ஒரே கயிற்றினால் கட்டப்பட்டுத் தமது தகப்பனின் கட்டளையைத் தலைமேல் கொண்டு, ஸ்திரீயினால் அபகரிக்கப்பட்ட மனதுடன் கூடிய மன்னனின் வார்த்தையை நிலைநிறுத்தித் தம்முடைய மனைவியுடன் ஸ்ரீ ராமபிரான் காட்டுக்குச் சென்றனர். எப்படி ஒரு மகரிஷி ஆனவன் தன்னுடைய பஞ்ச இந்திரியங்களையும் அவைகளின் காரியங்களையும் விட்டுவிட்டுத் துறவறம் பூண்டு வீட்டைவிட்டுக் காட்டுக்குச் செல்லுகிறானோ, அவ்வாறு ராமர் ராஜ்யம், சர்வ ஐசுவரியம், சுற்றத்தார், சிநேகிதர்கள், தன்னைச் சார்ந்த எல்லா விஷயங்களிலும் ஏற்படும் அபிமானம், அதாவது இந்திரியங்களுக்கு ஏற்படும் பற்றுதல் இவைகளைத் தியாகம் செய்துவிட்டு வனத்திற்குச் சென்றார். (வனம் அருணிவ முக்த சங்க:) இதில் ராமனுடைய ஆசாரத்திலிருந்து சத்யம் என்னும் தர்மமானது பிதாவின் சொல்லை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதின் மூலம் விளங்குகிறது. இதுதான் வால்மீகியின் ஹிருதயம் என்பது ராமருடைய வார்த்தைகளினாலேயே வெளியாகிறது. கைகேயி ராமரை வனத்திற்குப் போகச் சொல்லும் காலத்தில் ராமர் பின்வருமாறு சொல்லுகிறார்: "நான் விஷயத்திற் பற்றுதல் உள்ளவன் அல்லன். ரிஷி, முனிவர்களுக்கும் சமமான என்னைத் தெரிந்துகொள். சுத்தமான தர்மத்தில் நான் நிஷ்டை அடைந்தவன்".

"ராமஸ் சத்ய பராக்ரம" 'ராமோ த்விர் நாபி பாஷதே' — ஸ்ரீ ராமன் இரண்டாவது வார்த்தையே கூறுகிறதில்லை. லக்ஷ்மணன் தன்னுடைய வில்லின் வலிமையால் கைகேயியையும் அவளைச் சேர்ந்தவர்களையும் நிக்கிரகம் செய்து ராஜ்யத்தில் அமர்த்துவதாகச் சொல்லும் சமயத்தில் ராமர் அவனை உசிதமான யுக்தி வாக்கியங்களினால் அவனுடைய கோபத்தை அடக்கி, சந்திரனிடமிருந்து குளிர்ச்சி விலகினாலும் சூரியனின் தேஜஸ் விலகினாலும் சமுத்திரம் அதனுடைய கொந்தளிப்பை (அலை ஓசை) நிறுத்தினாலும் தாம் தகப்பனுடைய வார்த்தையை மீறி நடக்க முடியாது என்று சொல்லுகிறார். ராமரின் சத்யத்தின் உறுதியைக் கைகேயினிடம் அவர் கூறும் வார்த்தைகளிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். "தகப்பன் கட்டளை அவசியம் இல்லை. நீங்கள் சொன்னாலே நான் காடு செல்வேன்" என்று உறுதி கூறுகிறார். சத்யத்தைப் பலவிதமாய் தன்னுடைய ஆசாரத்தில் ராமர் அனுஷ்டித்துக் காண்பிக்கிறார். ரிஷிகள் பிரார்த்தித்துக் கேட்டுக் கொண்டபடி, கரன், தூஷணன் இவர்களைக் கொன்று யாகத்தை ரக்ஷிக்கிறார். சுக்ரீவனுக்குத் தாம் வாக்குத்தத்தம் செய்தபடி வாலியைக் கொன்று ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்து வைக்கிறார். சர்வ சாஸ்திர மரியாதையையும் மீறி ஜடாயு என்கிற ஒரு கழுகுக்கு 'ஆஹிதாக்னிகள் அபராசூரிகள் இவர்களுக்கு என்ன கதி சாஸ்திரங்களினால் விதிக்கப்பட்டு இருக்கிறதோ அந்த நிலையை அடையக்கடவாய்' என்றும், 'என்னுடைய கட்டளையினால் நீ உத்தமலோகம் செல்' என்றும் தகப்பனாருக்குக்கூட நேரில் செய்யாத ஈமக்கிரியையைத் தாம் செய்கிறார். இதில் செய்நன்றி மறவாமல் உண்மையான மனதுடன் அபூர்வமான பிரதி உபகாரம் செய்வதைக் காணுகிறோம்.

மனதால் தனக்குக் கெடுதல் செய்தாலும் அதைக் கருதாமல் சத்ருவுக்குக்கூட நன்மை செய்வது மனதின் சத்யம். சீதாபிராட்டிக்கு அபகாரம் செய்த காக்கையின் ஒரு கண்ணை மட்டில் அபகரித்துப் பிராணனைக் காப்பாற்றுகிறார். ஒரு பிராமணனுக்கு 'எவ்வளவு வேண்டுமென்றாலும் கேள்' என்று வாக்கினால் தானம் செய்தபின், அவன் பாணத்தினால் எவ்வளவு தூரம் வில் எறி போகுமோ அவ்வளவு தூரம் உள்ள பசுக்களைத் தானம் செய்கிறார். விபீஷணனுக்கு அபயப்பிரதானம் செய்து தாம் வாக்குதானம் செய்த பிரகாரம் ராவணனைக் கொன்றபின் ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்கிறார். 'சத்ருவாய் இருந்தாலும் நண்பன்போல் வேஷம் பூண்டு என்னைச் சரணடைந்தால் அவனைக் கைவிடுவதில்லை என்பது விரதம்' என்று தர்மத்தைப் போதிக்கிறார். இம்மாதிரி நாம் அவருடைய நடவடிக்கையிலிருந்து, சத்யம், தர்மம் இரண்டு ரூபமாக

ஸ்ரீ ராமர் இருக்கிறார் என்று தெரிந்து கொள்ளவேண்டும்.

இந்த சத்யம், தர்மம் இரண்டும் முக்கிய மான ஆத்ம குணங்கள். அவைகளுக்கு அங்கம்; பிரமசரியம், பாதிவிருத்யம், (பதிவிரதையின் தன்மை). ஸ்திரீகளுக்கு உயர்ந்த தர்மம் சத்யம், பாதிவிருத்யம் என்ற பதிவிரதையின் தன்மை. இதற்கு உதாரணம் சீதாபிராட்டியார். புருஷர்கட்கு உயர்ந்த தர்மம் பிரம்மசரியம். இதற்கு உதாரணம் அனுமன். ராவணனால் அபகரிக்கப்பட்ட சீதை அசோக வனத்தில் இருக்கும்போது அவள் படும் துயரத்திற்குப் பாதிவிருத்யம் என்பது தான் ஒரே அமிருத சஞ்சீவியாய் இருக்கிறது. ராட்சஸிகள் பயமுறுத்தியும் தன்னுடைய புருஷனை விட்டு அவளது மனது சற்றும் அகலவில்லை. ராமன் அனுமனை தூதனாக அனுப்பியதும் அசோக வனத்தில் அனுமர் சீதையின் மனப்பான்மையைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார். தான் செய்த தர்மம் ஆவது: பூமியில் படுக்கை, கணவனை இடைவிடாமல் நினைத்தல் யமம் நியமம் (இந்திரியங்களை ஒடுக்கி இருப்பது) — இவை எல்லாம் வீணாகிவிட்டன என்று நினைத்துத் தனது பின்னலால் தன் உயிரை மாய்த்துக்கொள்ள முயற்சித்தபோது அனுமார் தமது அமிருதமான சொற்களினால் ராம குணத்தைப் பொழிந்து அந்த பதிவிரதா ரூபமான கொடியை உய்விக்கிறார். தன்னை மட்டிலும் பாதிவிருத்ய தர்மம் காப்பாற்றும் என்பதில்லை; தன்னை அணுகினவர்களையும் அந்த தர்மமே ரக்ஷிக்கிறது. அனுமன் வாலில் தீ மூட்டியதும் 'நான் கணவனுக்குத் தொண்டு செய்தது உண்மையானால் அந்த நெருப்பு குளிர்ந்திருக்கட்டும், என்று வேண்டுகிறாள்; அவ்விதமே ஆகிறது.

இதே மாதிரி அனுமர் பிரம்மசரியத்தினால் தம்மையும் காப்பாற்றிக் கொண்டு பிறரையும் காப்பாற்றுகிறார். சம்சாரத்தை அனாயாசமாய் பிரம்மசரியம் வகித்த முனிவர்கள் தாம் தாண்டுவதுபோல், கடலைத்தாண்டித் தம்முடைய பிரம்மசரியத்தால் சீதாபிராட்டிக்குப் பிராணப்பிரதிஷ்டை செய்கிறார். அப்பால் தம்முடைய பிரமசரிய பலத்தினால் தமக்கு லங்கிணி, ராக்ஷதர்கள் இவர்களுடைய உபத்திரவம், வாலில் தீ இவைகளிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளுகிறார். விசலய் கரணி என்ற அமிர்த சஞ்சீவினி விருக்ஷத்தைக் கொண்டு வந்து யுத்த காலத்தில் யுத்த வீரர்களை உயிர்ப்பிக்கிறார்.

பகவத் சேவை என்பது சாமான்ய தர்மம். அதை லக்ஷ்மணர் கைப்பற்றி ஸ்ரீ ராமனுக்கு வனத்தில் தொண்டு செய்கிறார்

பரதர் பாகவத உத்தமர். விசேஷ தர்மமான பாகவத சேவையைக் கைப்பற்றி அதனால் உத்தம தர்மத்தின் பலனை அடைகிறார். 14 வருஷம் பாதுகையைத் தமக்கு எஜமானனாக வைத்து அதனிடம் யாவற்றையும் ஒப்பித்து ராஜ்ய தர்மத்தை நடத்துகிறார். 14 வருடம் முடியும் தறுவாயில் தம் பிராணனைக் கூட விடுவதற்கு முயலுகிறார், அப்பொழுது "சீதையைக் கண்டேன்" என்று ராமனிடம் சொன்ன அனுமன் "வந்தார் ராமர்" என்று சொல்லிப் பாகவத உத்தமனைக் காப்பாற்றுகிறார். சித்ர கூட வனத்தில் ராமர் இருக்கும்போது அவருடைய திருவடிகளில் விழுந்து கண்ணீருடன், 'முக்ய தர்மத்தை விட்டு அகன்ற எனக்கு ராஜ்ய தர்மம் எவ்விதம் காப்பாற்றும்?' என்று பரதர் அலறுகிறார். ராமரோ 'பிரம்மாணம் இவ ஸாஸ்வதம்' என்றபடி மரவுரி மான் தோலுடன் உட்கார்ந்திருந்த அவர், பரதன் தம் திருவடிகள் அகப்படாமல் புரளுவதைக்கண்டு அவனைக் கட்டி அணைத்து மனதால் ஆலிங்கனம் செய்து, தர்மத்தின் சொரூபத்தை ஒவ்வொன்றாக எடுத்து உரைத்து, கடைசியில்தாம் தம் தர்மத்தைக் கைவிடாமல் வனவாசத்தையே கைப்பற்றி, பாகவத உத்தமனான பரதனைப் பாகவத சேவை என்கிற தர்மத்தில் ஸ்தாபித்து இராஜ்யத்தை ஆளும்படி செய்கிறார்.

ராம பட்டாபிஷேகம் நடக்கிறது. சீதை கையில் ஒரு திவ்யமான முக்தாஹாரம் (முத்து மாலை) வைத்துக்கொண்டிருக்கிறாள். 'இதை உனக்கு விரும்பியவனுக்குப் பரிசளி' என்று சொல்லுகிறார் ஸ்ரீராமர் இந்த அனுமன் தான் புத்தி, வலிமை, சாமர்த்யம் வாய்ந்தவன் என்று சீதையைத் தேடத் தூதனாக அனுப்பி, 'என்னுடைய சீதையைப் பார்த்து சித்தார்த்தனாக திரும்பி வந்ததும் என்னுடைய சர்வஐசுவர்யத்தையும் உனக்கு இந்த ஆலிங்கத்தினால் அளிக்கிறேன்' என்று அன்பினால் கட்டி அணைக்கிறார். பட்டாபிஷேக காலத்தில் நீ தான் பிராஞ்யன் (புத்தி சமர்த்தன்) 'விக்ராந்தன்' என்று சொல்லி புருஷோத்தமன் என்ற பதத்தினால் உபசாரம் செய்து முத்துமாலையை அனுமன் கழுத்தில் சாற்றுகிறாள் சீதை.

தர்மம் சத்யம், இரண்டும் பிரம்மசரியம், பாதி விருத்யம் இவைகளை முக்கிய அங்கமாகக் கொண்டு இவைகளின் விஜயத்தை இந்த பட்டாபிஷேக காலத்தில் எல்லோரும் அனு

பவிக்கும்படியாக முக்தாஹாரத்தைத்தானம் செய்வதின் மூலம பதிவிரதா ரத்னமான ஸீதை நைஷ்டிக பிரம்மசரியத்தின் நித்ய ஐசுவரியத்தை அலங்கரிக்கிருள். விபீஷணனே என்ருல், பரம ஆபத்து வந்தபோதிலும் எனக்கு அதர்மத்தில் புத்தி சொல்லவேண்டாம் என்று வரம் வாங்கின இவனைத் தர்மாத்மா என்ருர் ராமர். துஷ்ட சகவாசத்தை விட்டுப் புருஷோத்தமனுன ராமனின் நல்ல உயர்ந்த சங்கத்தை அடைகிருன். அவனுக்கு சரணுகதி என்கிற தர்மத்தினுலும் சத்சங்கம் என்பதினுலும் ராஜ்ய லாபம் ஏற்படுகிறது.

ராமர் ஸீதையை விட்டுப் பிரிந்து வனத்தில் ஏதோ புலம்பினதாக சில இடங்களில் வால்மீகி சொல்லுகிருர். அதன் உண்மை என்னவென்ருல் ஸ்திரீஸங்கிகளுக்கு இது தான் கதி என்று காண்பித்தாரே ஒழிய அவருக்கு எவ்வித கிலேசமும் ஏற்பட நியாயம் இல்லை என்று ஸ்ரீ சுகஸ்வாமி ஸ்ரீமத் பாகவதத்தில் சொல்லுகிருர்.

ராவணனைக் கொல்வது மாத்திரம் அவதாரத்தின் பிரயோஜனம் இல்லை. மனிதர்களை ஆசாரத்தினுல் காப்பாற்றுவது தான் அவதாரத்தின் பிரயோஜனம் என்று ஸ்ரீ சுகஸ்வாமி ஒரு அரிய சூத்ரம் போட்டு இருக்கிருர். இப்பொழுதும் நினைக்கும் பக்தர்கள் யோகிகள் மனதில், தம்முடைய முள்ளினுல் கிலேசமடைந்து தண்டக வனத்தில் கஷ்டப்பட்ட திருவடிகளை தியானத்திற்கு இந்த உலகத்திலேயே வைத்துவிட்டு அந்தர் ஜோதிஸை ஸ்ரீ ராமர் அடைந்தார்.

சத்யம், தர்மம், பிரமசர்யம், பாதிவிருத்யம, பாகவத சேவை, ஸ்ரீ ராமத்தியானம் என்கிற 6 முக்கிய கருத்துக்களைத் தர்மமாக அமைத்து சாஸ்திர சுருதி ஸ்மிருதிகளின் கருத்துக்களை அங்கங்கே ரத்ன ரூபமாகப் பொறுக்கி "ராமஸ் ஸமுத்திரமிவ ரதனுட்யம் சர்வ சுருதி மனோகரம்" என்று இழைத்து, ஒரு புண்ணிய கிரந்தமாக ஸ்ரீ வால்மீகி அமைத்திருக்கிருர். இதுதான் வால்மீகி ஹிருதயம்.

விரதம்

(செ. வே. ஐம்புலிங்கம்)

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண்
செய்யாமை அற்றே தவத்திற்குரு-திருக்குறள்

விரதமாவது ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டு இன்ன தருமஞ் செய்ய வேண்டியதென்றும், இன்ன பாவம் ஒழிக்க வேண்டியதென்றும் தத்தம் சக்திக்குப் பொருந்தும்படி வரையறுத்துக் கொள்ளப்படுவதாம். விரதம் நோன்பு என்பன ஒரு பொருட் சொற்கள். விரதத்தால் மனம் புத்தி முதலான உட்கருவிகள் பரிசுத்தமடையும். அவை பரிசுத்த மாயவழி பிறவிப் பெருங் கடலை நீந்த ஏது உண்டாகும். அதனுல் இறுதியில் முத்தியும் சித்திக்கும். ஆதலால், ஞானம் கைகூடுவதற்குச் சாதனம் விரதம் என்பது சொல்லாமலே அமையும்.

விரதம் இருவகைத்து

இனி விரதம்,நித்தியம் நைமித்தியம் என இரண்டு வகைப்படும். நித்திய விரதங்களாவன :—அருளுடைமை, இன்னு செய்யாமை, கொல்லாமை புலாலுண்ணுமை, கள்ளாமை, வாய்மை, கூடாவொழுக்க மின்மை, கோபமில்லாமை, தவம் முதலியன. மேற்கூறியவற்றுள் அருளுடைமையே மிகச் சிறந்தது. இது மற்றைய விரதங்களுக்கெல்லாம் அடிப்படையாயுமுள்ளது. அருளுடைமையாவது யாதென்று ஆராயப்புகின், அது சுயநலங் கருதாமல் எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய இரக்கத்தையும் அன்பையுமுடைமை என்பது பெறப்படும். இக்கருணையை நாம் வளர்க்கும் நிமித்தம் அதனைக் கெடுப்பது யாதென்று முதலில் ஆராயவேண்டும். ஆராய்ந்து அதனை அறவே ஒழிக்க உபாயந் தேட வேண்டியது அவசியம். எம்மாராய்ச்சியில் புலாலுண்ணல், கூடா வொழுக்கம், கோபம் ஆகிய மூன்றுமே அருளுக்குச் சத்துரு என்று கண்டோம். இதன் உண்மை பின்வரும் வாக்கியங்களாலும் தெளியப்படும். "அருளாட்சி யாங்கில்லை ஊன் தின்பவர்க்கு" "நோன்பென்பது கொன்று தின்னுமை" "கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்க" "பூசையென்பது ஆசைகோபம் அகந்தை அடக்கியே, நீச ஐம்பொறி நெஞ்சுகள் நிறுத்தியே, ஈசனைத் தன் இதயத்துக் காண்டலே". ஆதலால் நாம் மேற்கூறிய பாவங்களை விலக்க முயல வேண்டும். அப்படிச் செய்யாவிடின் இறைவனது திருவடிகளாகிய கருணைமாக் கடலில் யாம் திளைப்பது யாங்ஙனம்?

நைமித்திய விரதம்

நைமித்திய விரதங்களாவன உபவாச விரதங்களாம். உபவாசமாவது, மனம் பொறி வழிப் போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத்தேனும் சுருக்கியேனும், மனம் வாக்குக் காயம் எனும் மூன்றினலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேஷமாக வழிபடுதலாம். சில காலங்களிலே திருவருள் நுகர்ச்சி அதிகமுண்டு. இக்காலங்கள் தாம் விரத காலங்கள் என்று கொள்ளப்படுவன. நித்திய விரதம் நைமித்திய விரதத்திற்கு இன்றியமையாதது. நைமித்தியத்தை மாத்திரம் கைக்கொண்டு நித்தியத்தைப் புறக்கணிப்பது பேதமையாகும். சில மனுஷர்கள் உபவாச காலங்களில் மாத்திரம் மாமிசம் புசித்தலை ஒழித்து மற்றக் காலங்களில் பழையபடி உண்கிருர்கள். தீயதென்று கண்டறிந்துதானே அவ்வுணவை உபவாச காலங்களில் விலக்குகிருர்கள். அக்காலங்களில் ஆகாதது மற்றக் காலங்களில் ஆவது எங்ஙனம்? இதைச் சிறிதேனும் சிந்திப்பாராக. நிற்க.

உபவாச விரதங்களுடன் சிவபூசை, ஆலய வழிபாடு, மாகேசுர பூசை, திரு விளக்கேற்றல், சிவாலயத் தொண்டு, சிவனடியார் தொண்டு, அவ்வவ் விரத மூர்த்தியின் மூல மந்திர செபம், பஞ்சாக்ஷர செபம், திருவருட்பாப் பாராயணம் முதலியன செய்வது விசேஷம். "நன்று நோக்கிலென் பட்டினியாகிலென், குன்றமேறி யிருந்தவஞ் செய்பிலென், சென்று நீரிற் குளித்துத் திரியிலென், என்று மீசன் என்பார்க் கன்றியில்லையே" என்னுந் தேவாரம் இங்கு கவனிக்கத் தக்கது. உபவாச விரதங்கள் உபாசனு மூர்த்தத்திற்கேற்ப சிவ விரதம், தேவி விரதம், விநாயக விரதம், சுப்பிரமணிய விரதம், வைரவ விரதம், வீரபத்திர விரதம் எனப் பலவகைப்படும்.

சிவ விரதமாவன :— திங்கட்கிழமை விரதம், உமா மகேசுர விரதம், சிவராத்திரி விரதம், கேதார விரதம், கலியாணசுந்தர விரதம், சூல விரதம், இடப விரதம் என எட்டாம். பிரதோஷ விரதமும் இதில் அடங்கும்.

தேவி விரதம் :— வெள்ளிக்கிழமை விரதம், ஐப்பசி யுத்தர விரதம், நவராத்ரி விரதம் என மூன்ரும்.

விநாயக விரதம் :— வெள்ளிக்கிழமை விரதம், விநாயக சதுர்த்தி விரதம், விநாயக சட்டி விரதம் என மூன்ரும்.

சுப்பிரமணிய விரதம் :— வெள்ளிக்கிழமை விரதம், கார்த்திகை விரதம், கந்தசட்டி விரதம என மூன்ரும்.

வைரவ விரதம் : செவ்வாய்க்கிழமை விரதம், சித்திரைப் பரணி விரதம், ஐப்பசிப் பரணி விரதம் என மூன்ரும்.

வீரபத்திர விரதம் :— செவ்வாய்க்கிழமை விரதமென ஒன்றே யாம்.

அனுஷ்டிக்கும் முறை

விரதம் நோற்பவர் காமங் கோபம் முதலிய குற்றங்களைப் பற்றறக் களைதல் வேண்டும். ('காப்பது விரதம்' என்பது ஔவையார் வாக்கு) தவருது விடியுமுன் நித்திரை விட்டு எழல் வேண்டும். எழுந்து புண்ணிய தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்த பின்பு தியானம், செபம், பூசை, ஆலய தரிசனம், புராண படனம் முதலியன விசேஷமாகச் செய்தல் வேண்டும். திருக்கோயிலிலே இயன்ற மட்டும் விளக்கேற்ற வேண்டும். அபிடேகத்திரவியம், நைவேத்தியத் திரவியங்கள் கொடுத்தல் வேண்டும். போசனம் உண்ணும்போது சிவனடியார் ஒருவரோடாயினும் உடனிருந்து உண்ணல் வேண்டும். இரவிலே நித்திரை செய்யும் போது மிகப் பரிசுத்தராய்க் கடவுளைச் சிந்தித்த வண்ணம் தரையிலே படுத்துறங்கி அதிகாலையில் எழுந்துவிடல் வேண்டும். உபவாச தினத்திற்கு முந்தின தினத்திலே ஒரு பொழுதுதான் போசனம் செய்தல் வேண்டும். உபவாசதினத்திற்குப் பிந்தின நாட்காலையிலே மாகேசுர பூசை செய்து, இனத்தவர்களோடு பாரணம் பண்ணல் வேண்டும். பாரணம் பண்ணியபின் பகலிலே நித்திரை செய்யாது சிவ புராணங்களைக் கேட்டுக் கொண்டிருத்தல் வேண்டும். விரத காலத்தில் உபவாசமிருப்பது உத்தமம். அது கூடாதவிடத்து ஒருபொழுது போசனம் செய்யலாம். மற்றைப் பொழுது பாலேனும், பழமேனும், பணிகாரமேனும் உட்கொள்ளலாம்.

விரதத்தைக் கிரமப்படி அனுசரிக்கக் கூடாதவர் தம்மாலியன்றவளவு அனுசரிப்பதே தகுதி. ஏனென்ருல் தம்மளவுக்கு மீறித் தேகத்தை வருத்தப்படுத்த நேரிடின், அவர்களுக்கு விரதத்தில் வெறுப்புத் தோற்றும்; இதனல் விரதபலன் இல்லாமற் போய் விடும்.

முடிவுரை

விரதத்தால் அடையும் பலன் காமியம் நிஷ்காமியம் என இருதிறப்படும். காமியமாவது இம்மைப் பிரயோசனங் கருதி

அனுஷ்டிப்பது; அதாவது, விரதம் நோற்பதால் தாம் தாம் வேண்டியவற்றைப் பெறுவது. விரதத்தால் கடன், வறுமை, நோய், பயம் முதலான நீங்கப் பெறுதல் உலகப் பிரசித்தம். "வேண்டினுர் வேண்டியதே யீவான் கண்டாய்," [வேண்டியதே—(ஆன்ம ஈடேற்றத்துக்குத்) தேவையான பொருள்] "வாயானே மனத்தானே மனத்துணின்ற கருத்தறிந்து முடிப்பான் தன்னை" என்னும் திருப்பாசுர அடிகள் தம்மடியவர் குறைவு தீர்த்தாண்டருள்வதே விரதமாகப் பூண்டுள்ளார் சிவபிரான் என்பதை நன்கு விளக்கும். இம்மைப் பயன்கள் அசித்தியமும், மேலும் மேலும் ஆசையை உண்டாக்குவனவுமாதலால், நிஷ்காமியமே சிறந்தது. ஆயினும் யாதொரு பலனுங் கருதாது நோற்கப்படும் விரதமே மிகச் சிறந்ததாகும்.

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது வேண்டாமை வேண்ட வரும்."

"வேண்டத் தக்க தறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ வேண்டும் அயன்மாற் கரியோய் நீ வேண்டி யென்னைப் பணி கொண்டாய் வேண்டி நீயா தருள் செய்தாய் யானுமதுவே வேண்டினல்லால் வேண்டும் பரிசொன்றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே." "விரதமெலாம் ஆண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்" "இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்ருர். பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும் மறவாமை வேண்டும், இன்னும் வேண்டு நான் மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழிருக்க வென்ருர்".

என்னும் திருவருட்பாக்கள் இங்கு உற்று நோக்குதற் குரியன. விரதம் அனுஷ்டிப்போர் நல்லொழுக்கம் உடையராய் இருத்தல் வேண்டும். உலக இன்பங்களைச் சிறிது சிறிதாக விட முயற்சி செய்தல் வேண்டும். உலக ஆசை ஒழிந்த இடத்துத்தான் பிறப்பு ஒருவறகு நீங்கும்; பிறப்பு நீங்கிய வழியே முத்தி சித்திக்கும். "பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு" என்பது பொய்யா மொழி. "பிறவி வேரறுத்து என் குடி முழுதாண்ட பிஞ்ஞகா" என்னும் மணிவாசகமும் இக்கருத்தையே விளக்கா நிற்கும். ஒவ்வொருவரும தாம் தாம் என்னென்ன தீச் செய்கைகளுக்கு உறைவிடமாக இருந்து வாழ்நாளை வீணுளாகக் கழிக்கிருர்கள் என்பதைத் தம்முள்ளேயே காரண காரியத்துடன் ஆராய்ந்தறிந்து அக்குற்றங்களினின்றும் விலக உபாயந் தேடவேண்டும்.

பலன்

விரதத்திற்கு முக்கிய அமிசம் அருளுடைமை என்பது மேலே கண்டறிந்தோமாதலால் நாம் அதை நன்ருக வளர்க்க முயற்சி செய்ய வேண்டியது பெருங்கடனுகும். பண்டைக் காலத்தில் விளங்கிய ரந்திதேவர் என்னும் அரசர் நாற்பதெட்டு நாள் விரதம் அனுஷ்டித்து அருளுடைமையாகிய இவ்வரத்தையே சிவபிரானிடம் வேண்டிப் பெற்ருர்.

"அருளுடைச் சுடரே யளிந்ததோர் கனியே பெருந்திறலருந்தவர்க்கரசே, பொருளுடைக் கலமே புகழ்ச்சியைக் கடந்த போகமே யோகத்தின் பொலிவே, தெருளிடத் தடியார் சிந்தையிற் புகுந்த செல்வமே சிவபெருமானே, இருளிடத்துன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினியே".

செய்தி

1950-ம் ஆண்டு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் அறிக்கை

ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் (சங்கத்தின்) 42-வது வருஷாந்தரப் பொதுக்கூட்டம் சென்ற செப்டம்பர் 23-வது தேதியன்று பேலூர் மடத்தில் நிகழ்ந்தது. 1950-ம் ஆண்டில் சங்கம் செய்த பணியைப் பற்றிய சுருங்கிய அறிக்கை பின்வருவது:

நிலையங்கள்: மொத்தம் 67 மிஷன் (சங்க) நிலையங்களும் 8 கிளை நிலையங்களும் இருந்தன. இவையனைத்தும், மதவேற்றுமையோ பால் வேற்றுமையோ நிறவேற்றுமையோ இன்றி அனைவர்க்கும் தொண்டு செய்தும் எல்லாச் சமயங்கட்கும் பொதுவான சமயக் கொள்கைகளைப் போதித்தும் வரலாயின.

கஷ்ட நிவாரணப் பணி: ஸியால்தா ரயில்வே நிலையத்தில் கிழக்குப் பாக்கிஸ்தானத்திலிருந்து வந்த ஆயிரக்கணக்கான அகதிகட்குத் தினமும் உணவளித்தல் வடிவமாக ஏழுவாரகாலம் இலவசமான கஷ்ட நிவாரணப் பணியை நடத்திவந்து, பின் அதை மிஷன் நிறுத்தியது. இன்னும் எத்தனையோ அகதிகட்குத் தேவையானவற்றைப் பற்பல மாகாணங்களில் 19 நிலையங்கள் வழியாக ஏறக்குறைய ஆறுமாதகாலம் ஆகஸ்டு முடிவுவரை அளித்துவந்தது. பின் மிஷன் மேற்கு வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் டிப்பராவிலும் குடிவைக்கும் பணியை ஏற்று, 1445 குடும்பங்களைக் குடிவைத்தது. வருஷம் முடிவுவரை மிஷன் கஷ்ட நிவாரணத்திற்கும் குடிவைத்தற்குமாகச் செலவு

செய்த தொகை ரூ 1,22,251/—மேலும், பூமி யதிர்ச்சியால் அஸ்ஸாமில் துயரமடைந்த 10,116 மக்கட்கு 30,183 கெஜம் துணியும், மற்றும் ரொக்கமும் மருந்தும், மொத்தம் ரூ 7,036 செல வில் வழங்கப்பட்டன.

மருத்துவப் பணி: மிஷன் மொத்தம் 520 படுக் கைகளைக் கொண்ட 8 ஆஸ்பத்திரிகளை நடத்தி வந்துள்ளது; இவற்றில் சிகிச்சை பெற்றவரது தொகை மொத்தம் 13,764. டில்லியில் உள்ள க்ஷயரோக வைத்தியசாலை உள்பட 41 வெளிச் சிகிச்சை மருத்துவசாலைகளில், திரும்பத் திரும்ப வந்தவரது தொகை உள்பட, சென்ற ஆண்டில் 26,05,125 மக்கட்கு மருத்துவ உதவி அளிக்கப் பட்டது.

ஏழைகட்கு உதவி: இத்தலைப்பின் கீழ் 74 மணங்கு அரிசியும், 215 துணிகளும் போர்வை களும், ரூ 4,233-ம் தக்கார்க்குப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டன. இன்னும், 145 மாணவர் களும் 202 குடும்பங்களும் மாதவாரி உதவிப் பண மாக மொத்தம் ரூபாய் 23,244 பெற்றனர். சிந் துப் பிரதேசங்களிலிருந்து வெளியேறிய 34 கதி யற்ற மாணவர்கட்கு ஒழுங்காகப் பண உதவி அளிக்கப்பட்டது; இவ்வகையில் மொத்தச் செலவு ரூ 4740.

கல்வித்துறைப் பணி: இத்துறையில் நடை பெற்ற பணியில் அடங்கியவை பின்வருவன: (1) ஆசிரியர் பயிற்சிக்காக ஒன்று உள்பட 3 கல் லூரிகளும், 4 குருகுல வித்யாலயங்கள் உள்பட 22 உயர்தரப் பள்ளிகூடங்களும், 18 தமிழ்ப்பள் ளிக்கூடங்களும், 6 அநாதை இல்லங்களும்; இவற் றிற் கல்விகற்ற மாணவர்கள் 10418, மாணவிகள் 4571 (2) 60 கீழ்த்தரப் பள்ளிகள்; 7236 மாணவர் களையும் 2,568 மாணவிகளையும் கொண்டன; (3) 365 மாணவர்கட்குக் கல்வி புகட்டிவந்த 6 தொழிற் கல்வி கருவிப்பயிற்சிப் பள்ளிச் சாலை கள்; (4) 243 மாணவர்களைக் கொண்ட 3 போதனா முறைப் பள்ளிக்கூடங்கள். 2,215 மாணவர்கட்கு வசதியளித்துவந்த 37 மாணவர் இல்லங்களை மிஷன் நடத்தி வந்துள்ளது. மேலும், 355 மாண வர்களைக் கொண்ட 4 'பிரைமரி பள்ளிக்கூடங் களும் ரூ 227 உதவி பெற்றன.

இந்தியாவிற்கு வெளியில் வேலை: இலங்கை பர்மா சிங்கபூர் மாரிஷஸ் என்னும் பிரதேசங் களில் மிஷன் வெற்றிகரமாகத் தனது கல்வி போதிக்கும் பணியையும் பண்பாட்டை வளர்க் கும் பணியையும் நடத்திவந்துள்ளது. பாக்கிஸ் தானில்மட்டும் எப்படியோ தன் இருப்புக்கு ஆபத்து வாராதபடிக் காத்துவந்தது.

பொருளாதார நிலை: சென்ற வருஷ மொத்த வருமானம் ரூ 30,64,370—15—11, மொத்தச் செலவு ரூ 27,58,068—11—6.

பேலூர் மடம்
27—9—1951

சுவாமி மாதவாநந்தா
பொதுக்காரியதரிசி,
ராமகிருஷ்ண மிஷன்

இராமகிருஷ்ண மிஷன், கார், பம்பாய்—21.

இராமகிருஷ்ண மிஷனின் பம்பாய் நிலைய நிர் வாகக் கழகத்தார் 1949, 1950-ம் ஆண்டுகளில் தமது நிலையம் இயற்றிய பணிகளைப் பற்றிய சுருக்கமான அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

கீழை நாடும் மேலை நாடும் ஒன்றுகூடும் இட மாகிய பம்பாய் நகரத்திலும் சுற்றுப்புறங்களிலும் சென்ற 27 ஆண்டுகளாக மிஷன் மன்னுயிர்க்குப் பணிசெய்து வருவதைப் பலரும் அறிவர்; பல் வகைப்பட்ட வேறுபாடுகள் அமைந்த மக்கட் குள்ளே ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் சமரஸ மனப்பான்மையையும் ஞான முயற்சியை யும் நிலைநாட்டுதற்கு ஸ்ரீராமகிருஷ்ணப் பெரு மானது உலகப் பொதுவான உபதேசம் பெரிதும் பயன்படுமாதலின் இங்கே ஒரு நிலையம் தொடங் கப்பட்டது. வேதாந்தப் பிரசாரம், கல்வி, தரு மம் எனும் மூன்றுதுறைகளிலும் பணிகளை மிஷன் தாராளமாகச் செய்துவந்துள்ளது.

பம்பாய் நகரத்திலும் அதன் சுற்றுப்புறங்களி லும் வகுப்புகளை நடத்தியும் பிரசங்கங்கள் செய் தும், அம்மாகாணத்திலும் ஏனைய மாகாணங்களி லும் பிரசார வேலை செய்தும், மிஷன் சுவாமிகள் சமய சமரச மனப்பான்மையை எங்கும் ஊட்டி வந்துள்ளனர். சுவாமி சம்புத்தாநந்தர் சென்ற இரண்டு ஆண்டுகளிலும் பல இடங்களில் 384 சமய வகுப்புகளை நடத்தி, பகவத் கீதை, உப நிடதம், ஸ்ரீராமகிருஷ்ண—விவேகாநந்த உப தேசம், இந்தியரது தத்துவஞானம் முதலிய பல பொருள்களைப்பற்றிய அறிவைப் பரப்பிவந்துள் ளனர்; பம்பாய் கல்கத்தா மைசூர் திருச்சி சேலம் முதலிய பல இடங்களில் 85 பிரசங்கங்களை நிகழ்த்திவந்துள்ளனர். அமெரிக்கா டில்லி திரு வாங்கூர் பிஜி முதலிய இடங்களில் உள்ள எட்டு மிஷன் சுவாமிகளும் முற்கூறிய பணியில் சமயம் கிடைத்தபோது கலந்து கொண்டனர். அன்றியும், சம்பாஷணை மூலமாக ஞானதாகத்தோடு தம்மை நாடிய அன்பர்கட்கு வேண்டிய அறிவுரைகளையும் சுவாமிகள் வழங்கியுள்ளனர். இன்னும், இராம கிருஷ்ணர் விவேகாநந்தர் தூய அம்மையார் கிருஷ்ணர் புத்தர் இயேசுநாதர் சங்கரர் சைதன்யர் ஆகிய மதகுரவர்களின் பிறந்தநாள் விழாக்கள் பம்பாய் மடத்தில் பிரசங்கங்களோடு கொண்டாடப்பட்டன.

பொது ஜனங்கட்காக மிஷன் 4665 புத்தகங் களையும் பற்பல தினசரி, வார, மாதப் பத்திரிகை களையும் பெற்றுள்ள இலவச வாசகசாலை புத்தக நிலையத்தையும் நடத்திவருகிறது. 4185 புத்தகங் களைப் பொதுமக்கள் வாங்கிப் படித்துள்ளனர், 33 பத்திரிகைகளையும் பயன்படுத்தியுள்ளனர்.

மிஷனைச் சார்ந்த மாணவரில்லத்தில் குறிப் பிட்ட ஆண்டுகளில் 42 மாணவர்கள் வாழ்ந்து வந் தனர். இளைஞரைச் சமய வாழ்க்கைக்கும் பொதுநல வாழ்க்கைக்கும் தகுதியுள்ளவராக்கு வதே இவ்வில்லங்களின் நோக்கம். தம்மிச்சை யானே ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு நடக்கும் இயல்

பும், சகோதரத்வ பாவனையும் மாணவர்கட்கு இங்கே ஊட்டப்படும். சமீபத்திலே 50 மாணவர்கட்கு இருக்கவும் கற்கவும் வசதியளிக்கும் ஒரு புதுக்கட்டடம் அமைக்கப்பட்டது.

மிஷன் நடத்தும் தருமப்பணியில், நோய் தீர்க்கும் பணியும் பலவகைக் கஷ்ட நிவாரணப் பணிகளும் அடங்கியுள்ளன. அல்லோபதி, ஹோமியோபதி, ஆயுர் வேத முறை எனும் மூன்று வைத்திய முறைகளும் செவ்வனே கையாளப்பட்டு வருகின்றன. மொத்தம் ஓராண்டிற்கு 140000க்கு மேற்பட்ட நோயாளிகள் பயன்பெறுகின்றனர். மேலும், பஞ்சாப் அகதிகளின் கஷ்ட நிவாரணம், ஸௌராஷ்டிரா வெள்ளக் கஷ்ட நிவாரணம், அஸ்ஸாம் பூகம்பக் கஷ்ட நிவாரணம்-இவற்றிற்காகப் பணவசூல் செய்தும் உதவியளித்தும் வந்துள்ளது பம்பாய் நிலையம்.

தரும வைத்திய சாலைக்காக ரூ 50,000-ம், இலவசப் புத்தக வாசகசாலைக்காக ரூ 5000-ம் இன்னும் தேவையாயுள்ளது ; மேலும் மற்றைய பல விதப் பணிகளையும் தொடர்ந்து நடத்தவும் பொருள் வேண்டியுள்ளது. பொருளாளர் பம்பாய் மிஷனுக்குப் புரியும் உதவி மன்னுயிர்ப் பணிக்கே செலவிடப்படுகிறதாதலின், பரோபகாரச் சிந்தனையுள்ள அன்னார் அவ்வாறு உதவி புரிந்து, புகழும் புண்ணியமும் இன்பமும் பெறுவாராக.

மதிப்புரை

1. இலங்கைத் தமிழ் விழா மலர்

ஆசிரியர் : தமிழ் விழா மலர் ஆசிரியர் குழு ; பக்கம் 234 ; விலை—ரூ5 (தபாற் செலவு - 50 சதம்); கிடைக்கும் இடம் : க. நவரத்னம், சாந்திநிகேதன், பி. ஏ. தம்பிலேன், யாழ்ப்பாணம், சிலோன்.

இது இலங்கைத் தமிழ் விழா மலர் எனும் பெயர் பெற்றதாயினும், உண்மையிலே இலங்கைத் தமிழ் விழா, ஸேர் பொன்னம்பலம் ராமநாதன் அவர்கள் நூற்றாண்டு விழா, சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழக விழா எனும் மூவ்விழா நினைவு மலராகவே ஒருங்கே மிளிர்கின்றது. சிந்தைக்கினிய பல்வகை வண்ணங்கள் செறிந்து, செவ்விதின் நிரல்பட அழகுறக் கட்டுரையிதழ்கள் விரியப் பெற்று, தமிழ்ப் பண்பாடெனும் மகரந்தம் கமழ, இன்ப நறுந்தேன் பிலிற்ற, தமிழார்வம் மிக்க தொண்டர்களாகிய வண்டுகள் திரள, தமிழ்மொழி ஞாலம் களிகூர, தமிழணங்கின் திருவடி மலர் மீதே இடப்படுகின்றது இந்நினைவு மலர். செழுந்திந் தமிழ்ப் பூஞ்சோலையிலே, சிதைவுறாது தூய தமிழ் வளரும் யாழ்ப்பாண மரனிலே, சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசப் பயனுக அரும்பிய இந்நறுமலர், இந்தியாவும் இலங்கையும் தமிழ்ப்பணி புரியப் பண்டுபோல் இன்றும் ஒன்ருக இணைந்ததின் அறிகுறியாகத் திகழ்கிறது.

தமிழ்த் தொண்டு ஈழநாட்டிலே இந்நாள் வளரும் வகையினைக் குறிக்கும் ஆசிரியரது முன்னுரையும், தமிழ் வளர்ச்சிக் கழக வரலாறும், மகாவித்வான் பிரம்ம ஸ்ரீ சி. கணேசய்யரின் தமிழ்விழா வாழ்த்தும், சென்னை பிரதமரின் ஆசிச்செய்தியும் இம்மலர்க்கு இனிய பசிய புற இதழ்களாக அமைகின்றன. இலக்கியச் சுவைமிக்க பதினைந்து கட்டுரைகள் இம்மலரின் அகவிதழ்களாகப் பொலிகின்றன. இலங்கை யாற்றுப்படையிலே தொடங்கி, மட்டக் களப்புத் தமிழகத்தை நினைவுறுத்தி, மொழிக்கலை சிற்பக்கலை சமயக்கலை இலக்கியக்கலை முதலிய பல கலைகளிலும் ஈழ நாடு வளம் பெற்றிருத்தலையும், ஈழத் தமிழர் இந்தியா சென்று புகழ் நிறுவியதையும், ஈழ நாடும் தென் தமிழ் நாடும் பழங்கால முதலே தொடர்புற்றிருந்ததையும், இலங்கை அரசியல் வரலாறுகளையும் இலங்கை முஸ்லீம்களும் கிறிஸ்தவ மிஷனரிமாரும் தமிழுக்குப் பணியாற்றியமையையும், ஈழத்தின் பிரசித்த இடங்களைப் பற்றியும், மிக்க பெருக்கமும் மிக்க சுருக்கமும் இன்றி விளங்க எடுத்துக் காட்டும் பெற்றியன அக்கட்டுரைகள். மேலும், அவை திருந்திய வாய்க்கினிய தமிழில் அறிவும் ஆராய்ச்சியும் அனுபவமும் மிக்க தக்கோரால் எழுதப்பட்டவை ; எடுத்த பொருள்களை இயன்ற வரை முற்றுப்பெற அறிவுறுத்துபவை ; இலங்கையிற் புகழ்பெற்ற இடங்கள், சிற்பங்கள், கோயில்கள், புலவர்கள் சம்பந்தமான 42 புகைப் படங்கள் மலர்த்தாது போன்று நடுவே அமையப் பெற்றவை.

இலங்கைத் தமிழ் வரலாற்றைப்பற்றிய ஓர் அரிய பொக்கிஷமாகிய இப்பதிப்பு நூல்நிலையங்களையும் வாசக சாலைகளையும் அணி செய்து, அறிவு நிதியைப் பெருக்கும் இயல்பினது என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ சாரதா தேவியாரது பிறந்த தினம் டிசம்பர் 20ம் தேதி வியாழக் கிழமை *(20-12-51)*